


# விடுதலைப்புலிகளின் வீர வரலாறு




சிறப்பு மலர்

15

# விடுதலைப்புலிகளின் வீர வரலாறு

தமிழீழ விடுதலைப்புலிகளின் வீர வரலாறுதான் தமிழீழ புரட்சிகர விடுதலைப் போராட்டத்தின் வரலாறுகும். ஏனெனில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமே தமிழீழ மண்ணில் ஆயுதப் போராட்டத்துக்கான உறுதியான அடித்தளத்தை அமைத்து நீண்ட காலமாக தொடர்ச்சியான, நிலையான ஆயுதப் போராட்டத்தினை முன்னெடுத்திருக்கின்றது. விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டமானது பத்து ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றைக் கொண்டது. உருக்குப் போன்ற உறுதியுடனும் உன்னத தியாக உணர்வுடனும் வீர காவியங்கள் படைத்த வீரமறவர்களின் வரலாறு இது. புரட்சிகர வரலாற்றுச் சூழ்நிலையில் பிறப்பெடுத்த விடுதலைப்புலிகள் இயக்கம் தலைமறைவு கெரில்லா அணியாகத் தோன்றி இன்று பரந்துபட்ட மக்களின் அபிமானத்துக்கும் ஆதரவுக்குமுரிய தேசிய விடுதலை இயக்கமாகப் பரிணமம் பெற்றிருக்கின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகள் வீம்புக்காகவோ பொழுது போக்குக்காகவோ ஆயுதமேந்தியவர்களல்லர். கடந்த 30 ஆண்டு காலமாக, இலங்கைத் தமிழர்கள் இழந்து வந்த உரிமை

களை மீட்க என உண்ணாநோன்புகள், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் கறுப்புக்கொடி இயக்கங்கள், கடை அடைப்புக்கள் மறியல்கள் என அமைதி வழிகளில் எல்லாம் போராடித் தமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்குத் தீர்வுகாண விழைந்த போதும், சிங்கள ஆட்சியாளர்கள் அந்த அமைதி வழிப் போராட்டங்களை ஆயுதப் படைகளின் இரும்புக் கரங்களினால் வன்முறையில் நசுக்கியதுடன், தமிழர்கள் அனுபவித்து வந்த மிச்ச சொச்ச உரிமைகளையும் பறித்தனர். ஆட்சியாளரின் இந்த விலங்குத்தனமான ஒடுக்குமுறை எல்லை மீறி உச்சக்கட்டத்தை அடைந்ததாலும், அமைதி வழிப் போராட்டங்கள் தொடர்ந்து தோல்வி அடைந்ததாலும், தன்னாட்சி பெற்றால் மட்டுமே இலங்கையில் தமிழர்கள் வாழமுடியும் என்ற நிலை தோன்றிய பின், தன்னாட்சி பெற ஆயுதப்போர் ஒன்றே வழி என்ற நிலை ஏற்பட்டதால்தான் விடுதலைப் புலிகள் ஆயுதமேந்திப் புரட்சிகரமான விடுதலைப் போரில் குதித்தனர். விடுதலைப் புலிகளின் வரலாற்றைச் சித்தரிக்கும்போது தமிழீழத்தின் புரட்சிகர ஆயுதப் போராட்டத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் பற்றிய வரலாற்றுப் பின்னணியைக் குறிப்பிடுவது இன்றியமையாதது.

## வரலாற்றுப் பின்னணி.

1948ல் பிரிட்டிசார் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்குவதாகக் கூறி தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்குச் செவி சாய்க்காது நாட்டின் ஆட்சி அதிகாரத்தை ஒரு தலைப்பட்சமாக ஒற்றையாட்சி அரசமைப்பின் கீழ் சிங்களப் பெரும்பான்மையின் கைகளில் ஒப்படைத்து விட்டுச் சென்றனர். அதிகாரத்தைக் கையேற்ற சிங்கள ஆட்சியாளர்கள் இலங்கையை ஒரு தனிச்சிங்கள பௌத்த நாடாக்க வேண்டும் என்ற வெறியுடன், தமிழினத்தை எப்படி எல்லாம் அழிக்க முடியுமோ அப்படியெல்லாம் அழிப்பதற்கு மிகப் பெரிய அளவில் திட்டம் தீட்டிச் செயற்பட்டு வந்தனர். ஒவ்வொரு தேர்தலின் பின்பும் ஆட்சியாளர்கள் மாறினர். அவர்களது நடைமுறைக் கொள்கைகள் மாறிற்று. ஆனால், தமிழினத்தை அழித்தொழிப்பதற்கான முன்னைய அரசால் கொண்டுவரப்பட்ட இன அழிப்புத் திட்டத்தை மட்டும் மாறி மாறி வந்த ஒவ்வொரு அரசும் மாற்றாமல் அப்படியே தொடர்ந்து அமுல்படுத்தி வந்தன.

## இனக்கொலைத்திட்ட வளர்ச்சியின் வரலாறு


இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் இந்திய மக்களின் சுதந்திர எழுச்சியைச் சிதைப்பதற்குச் சதி செய்து வங்காளப் பிரிவினையை வெள்ளையர் கொண்டு வந்தது போல, பதவிக்கு வந்தவுடனேயே சிங்கள ஆட்சியாளர்கள் தாம் அமுல் நடத்தவிருக்கும் தமிழின அழிப்புத் திட்டத்திற்கெதிராக இலங்கைத் தமிழர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கிளர்ந்தெழா வண்ணம், மலையகத் தமிழர்களை பூர்வீகத் தமிழர்களிலிருந்து வேறுபடுத்தி இலங்கையிலிருந்து வெளியேற்றத் திட்டம் தீட்டி, அவர்களின் குடியுரிமை, வாக்குரிமைகளைப் பறித்தனர். அதை எதிர்த்துத் தமிழ் மக்கள் அமைதி வழியாகப் போராடி பாராளுமன்றத்தின் மூலமும், பொதுக்கூட்டங்கள் வாயிலாகவும் குரல் கொடுத்தபோதும், சிங்கள அரசு பணியாது தனது இனக்கொலைத் திட்டத்தின் முதலாவது கட்டத்தை நிறைவேற்றியது.

## நில ஆக்கிரமிப்பும் சிங்களக் குடியேற்றமும்.

அடுத்த கட்டமாக சிங்கள ஆட்சியாளர்கள் பூர்வீகமாக இலங்கையில் வாழ்ந்து வந்த தமிழ் விவசாயிகளின் வளங்கொழிக்கும் நிலங்களை ஆக்கிரமித்து அவற்றில் சிங்களவர்களைக் குடியேற்றினர். கடந்த 30 ஆண்டுகளுக்குள், இலங்கைத் தமிழர்கள் தமது சொந்த மண்ணைச் சிங்களக் குடியேற்றங்களிலிருந்தும் மீட்க அமைதி வழிகளில் போராடியபோதும், அம்பாறை என்ற தமிழ் மாவட்டத்தை முழுமையாகவும் வவுனியா, திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு, முல்லைத்தீவு என்னும் 5 (ஐந்து) மாவட்டங்களில் அரைவாசிப் பகுதிகளையுமாகத் தம் பாரம்பரிய மண்ணில் 3/8 பகுதியை இழந்து விட்டார்கள்.

சிங்களக் குடியேற்றத்தினால் இலங்கையில் ஒரு தமிழ் மாவட்டமே சிங்கள மயமாக்கப்பட்டு, அம்பாறை என்னும் பெயர் திகாமடுல்ல என்று மாற்றப்பட்டது. தமிழ் மக்களின் எதிர்ப்புகள், கண்டனங்கள் உதாசீனப்படுத்தப்பட்டு, வரலாற்றுக் காலந்தொட்டு தமிழ்

தமிழர் பகுதியில் சிங்கள ஆட்சியாளரால் கடந்த 30 ஆண்டுகளுக்குள் ஏற்படுத்தப்பட்ட சிங்களக் குடியேற்றம்.



மக்கள் தொடர்ந்து வாழ்ந்து வந்த செந்தமிழ் ஊர்ப்பெயர்கள் எல்லாம் சிங்களப் பெயர்களாக மாற்றப்பட்டன. பட்டிப்பளை-கல்லோயாவாகியது. குமரன்கடவை-கோமரங்கடவ ஆகியது. முதலிக்குளம்-மொரவாவ ஆகியது. மகாவிளாங்குளம்-மகாதிவுல்வாவ ஆகியது. புடவைக்கட்டு சாகரபுர ஆகியது. புல்மோட்டை-கணிகபுர ஆகியது.

ஒரு தேசிய இனத்தை-அதன் மொழியை-கலை, கலாச்சாரத்தை அழிக்க வேண்டுமானால், அந்த இனத்துக்கென ஒரு பிரதேசத்தை இல்லாதாக்கிட வேண்டும் என்பதே, ஏகாதிபத்தியவாதிகளின் சூழ்ச்சிச் சூத்திரமாகும். சிங்கள ஏகாதிபத்தியவாதிகள் இதனை மிகச் சிறப்பாகச் செய்து வருகின்றனர். இதனடிப்படையில்தான் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தன அவர்கள் இலங்கையில் தமிழர் பிரதேசம் என ஒன்று கிடையாது என்று மேடைகள் தோறும் முழங்கி வருகிறார்.

## ஆட்சி மொழிச் சட்டம்.

அடுத்து ஆட்சியாளர்கள் தமிழர்களின் தாய் மொழியை நாட்டின் இரண்டாம்தர மொழியாக்கி சிங்களத்தை நாடு முழுவதற்கும் ஆட்சி மொழியாக்கினார்கள். சிங்களத் திணிப்பை எதிர்த்து ஈழத்தில் அமைதி வழியில் மறியல் போராட்டங்களை நடத்திய தமிழ் மக்களையும், தலைவர்களையும் ஆட்சியாளர்கள் குண்டர்களை ஏவிப் பயங்கரமாகத் தாக்கி இரத்த ஆறு ஓட வைத்து, தமிழர் இரத்தத்தின் மீது தனிச்சிங்களச் சட்டத்தை அமுல்படுத்தினர்.

## பொருளாதார புறக்கணிப்பு

அடுத்து பொருளாதார ரீதியில் தமிழ் மக்கள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டனர். வெள்ளையர் கையில் இருந்த ஆட்சியதிகாரம் சிங்களர் கைகளுக்கு மாறியதன்பின், நாட்டில் அமைக்கப்பட்ட 400க்கும் அதிகமான தொழிற்சாலைகளில் ஒன்று கூட தமிழ்ப் பகுதிகளில் அமைக்கப்படவில்லை. அரசு வேலைவாய்ப்புகளில் 2% தானும் தமிழர்களுக்குத் தரப்படவில்லை. தமிழ்ப் பகுதிகளிலுள்ள பொருளாதார வளங்கள் திட்டமிட்டுச் சிங்கள ஆட்சியாளரால் சூறையாடப்பட்டன. உதாரணமாக தமிழ்ப் பகுதிகளில் உள்ள சிமெண்டுக்குத் தேவையான மூலப் பொருளான சுண்ணாம்புக் கற்களைச் சிங்களப் பகுதிக்கு எடுத்துச் சென்று அங்கு சிமெண்ட் ஆலைகளை அமைத்து சிங்களர்களுக்கு வேலைவாய்ப்பு தேடித் தந்தது சிங்கள அரசு. தமிழ்ப் பகுதிகளில் உள்ள மீன் வளப்பகுதியில் சிங்கள மீனவர்களைக் குடியமர்த்திக் காலம் காலமாக மீன்பிடித்து வந்த தமிழ் மீனவர்களின் தொழில் வாய்ப்பை அபகரித்துக் கொண்டனர். தமிழ்ப் பகுதிகளில் உள்ள வளமான விவசாய நிலங்களில் சிங்களர்கள் குடியேற்றப்பட்டனர். தமிழ் விவசாயிகளின் அறுவடைக்காலங்களில் அதே பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து உற்பத்திச் செலவுதானும் தமிழ் விவசாயிகளுக்குக் கிடைக்காமற் செய்தனர் சிங்கள ஆட்சியாளர். பொருளாதார ரீதியில் எல்லாமட்டத்திலும் தமிழர்கள் சுரண்டப்பட்டனர்-புறக்கணிக்கப்பட்டனர்.

## கல்வியில் தரப்படுத்தல்.

தமிழ் மாணவர்களுக்கு கல்வி உரிமையும் மறுக்கப்பட்டது. கடந்த 30 ஆண்டுகளாக ஆட்சியை அலங்கரித்தும் தமிழ் மாணவர் கல்வித்தரத்திற்கேற்ப சிங்கள மாணவரின் கல்வித்தரத்தை உயர்த்திச் சமப்படுத்த முடியாத சிங்கள ஆட்சியாளர்கள் செருப்புக்கேற்ப காலை வெட்டுவது போல-சிங்கள மாணவர் கல்வித்தரத்துக்கு மேல் தமிழ் மாணவர் கல்வித்தரம் இருக்கக்கூடாது என்று தமிழ் மாணவர் கல்வித்தரத்தைக் குறைப்பதன் மூலம் சிங்கள மாணவர்களின் கல்வித்தரத்தைச் சமப்படுத்தும் முயற்சியாக 'தரப்படுத்தல்' என்னும் கல்வித் திட்டத்தை உயர்கல்வியில் செயற்படுத்தினர். இதை எதிர்த்து மாணவர்கள் நடத்திய அமைதி வழி எதிர்ப்புகள் பயனற்றுப் போயின. தமிழர்களது கலை, கலாச்சார மதவழிபாட்டு உரிமைகள் கூட சட்டபூர்வமாகவும், சட்டத்துக்கு அப்பாற்பட்ட முறையிலும் பறிக்கப்பட்டன. இலங்கையின் முதன்மையான மதமாக பௌத்த மதத்தை பிரகடனப்படுத்தி அதன் மூலம் தமிழர்களின் வழிபாட்டு மதங்கள் புறக்கணிக்கப்பட்டு பௌத்த மதம் மட்டும் அரசு மதமாக்கப்பட்டது; அரசினால் பாதுகாக்கப்பட வேண்டிய மதம் எனப் பிரகடனப்படுத்தப்பட்டது. தமிழர்களின் வழிபாட்டுத் தலங்களான பள்ளிவாசல்கள், கோவில்களில் வழிபாடு நடத்துபவர்கள் ஆட்சியாளரின் ஆயுதப்படையினரால் தெரு நாய்கள் போலச் சுட்டுக் கொல்லப்பட்டனர். கிறித்துவ தேவாலயங்களுக்குள் புகுந்து இனவாதத்தைக் கிளப்பிக் கலாட்டா பண்ணி தமிழ் வழிபாடுகளை நிறுத்தினர். தமிழர்களின் கலாச்சார விழாக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டன.

பெரும்பான்மைச் சிங்கள மக்களுடன் சமாதானத்துடனும் ஒற்றுமையுடனும் இணைந்து வாழ்வதற்குச் சாத்தியமான சகல நடவடிக்கைகளையும் தமிழர்கள் மேற்கொண்டிருந்தனர். ஆனால் தமிழ் மக்களின் நியாயமான-சட்டபூர்வமான கோரிக்கைகள் அனைத்தும் சிங்கள ஆட்சியாளரால் முற்று முழுதாக நிராகரிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து சிங்கள ஆட்சியாளர்களின் அநீதிகளை எதிர்த்துத் தமிழ் மக்கள் தமது அடிப்படை மனித உரிமைகளை வென்றெடுப்பதற்காக கால் நூற்றாண்டு காலமாக சாத்வீக முறையிலேயே போராட்டத்தில் ஈடுபட்டனர். சிங்கள ஆட்சியாளர்கள் அந்தச் சாத்வீகப் போராட்டங்களுக்கு மதிப்பளிக்காதது மட்டுமன்றி, சாத்வீகப் போராளிகளின் மீது சிங்களக் குண்டர்களை ஏவித் தாக்குதல்களை நடத்தினர். அத்தோடு தமிழ் மக்களின் உரிமைக் கிளர்ச்சிகளைக் காலத்துக்குக் காலம் அடக்கியொடுக்கி அவர்களைப் பயமுறுத்திப் பணிய வைக்கவெனத் தமது பிரச்சார சாதனங்களான வானொலி, பத்திரிகைகளின் உதவியுடன் சிங்கள வெறியர்களைத் தூண்டி தமிழ் மக்களுக்கு எதிராகக் காலத்துக்குக் காலம் கலவரங்களையும் ஏற்படுத்தினர்.

## அமைதி வழிக் கிளர்ச்சிகள்

★ *1956*ம் ஆண்டு சிங்கள மொழி மட்டும் ஆட்சி மொழியாக்கப்பட்டு தமிழ் மொழி உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் அதை எதிர்த்து தமிழ் மொழி உரிமைகளுக்காக கொழும்பு காலிமுகத் திடலில் அமைதியான முறையில் சத்தியாக்கிரகம் இருந்த தமிழ்த் தலைவர்கள் மீதும், தொண்டர்கள் மீதும் அன்றைய எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க அரசு சிங்களக் குண்டர்களை ஏவித் தாக்குதலை மேற்கொண்டது. அரசின் ஆயுதப் படையினர் சிங்களக் குண்டர்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டனர்.



★ *1958*ம் ஆண்டு தமிழ்ப்பகுதிகளில் மோட்டார் வாகனங்களின் இலக்கத் தகடுகளில் சிங்கள ஸ்ரீ எழுத்தைப் பொறிக்க வேண்டுமென்ற ஆட்சியாளரின் சட்டத்தை எதிர்த்து அமைதி வழியில் சிங்கள ஸ்ரீ எழுத்து அழிப்புப் போராட்டத்தை மேற்கொண்ட தமிழர்களைச் சிறையில் அடைத்துவிட்டு அதைச் சாட்டாக வைத்து நாடு முழுவதிலுமுள்ள தமிழ் மக்கள் மீது சிங்களக் குண்டர்களை ஏவி தாக்குதலை மேற்கொண்டனர். இந்த இனவெறித் தாக்குதலின் போது பாணந்துறை என்னுமிடத்தில் இந்துக்கோவில் அர்ச்சகர் ஒருவர் உயிரோடு தீ மூட்டிக் கொளுத்தப்பட்டார். கொதிக்கும் தார்ப் பீப்பாய்க்குள் பச்சிளம் பாலகர்கள் அமுக்கிக் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலின் போது ஆயிரக்கணக்கான தமிழர்கள் நாடு முழுவதிலும் கொல்லப்பட்டனர்.



**1961ம் ஆண்டு தமிழர் மாவட்டத் தலைநகரங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் (அரசாங்க அதிபர்) அலுவலகங்களுக்கு முன்னால் அமைதியான முறையில் மறியலில் ஈடுபட்ட தமிழ் மக்களில் ஒரு பகுதி.**

★ *1961*ல் தமிழ்ப்பகுதி நீதிமன்றங்களின் நிர்வாகத்தில் சிங்கள மொழியைத் திணித்ததை எதிர்த்தும், தமிழர் வாழும் மாவட்டங்களில் நிர்வாக மொழியாக தமிழ் மொழியே இருக்க வேண்டும் என்று கோரியும் அமைதி வழியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்களின் முன் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழர்களை அடக்க முதன் முறையாக சிங்கள இராணுவம் தமிழ்ப்பகுதிகளில் கொண்டு வந்து குவிக்கப்பட்டது. அமைதி வழியில் மறியல் செய்தவர்கள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

## அடிமைச் சாசனம்

இவற்றோடு நிறுத்தாத சிங்கள ஆட்சியாளர்கள் *1972*ம் ஆண்டு மே மாதம் *22*ம் நாள் தமிழ் மக்களுக்கு அதுவரை இருந்து வந்த அரைகுறைப் பாதுகாப்புக்களைக் கூட அரசியலமைப்பிலிருந்து நீக்கி தமிழ் மக்களுக்கு எவ்வித உரிமையும் இல்லாத, தமிழர்களை இரண்டாந்தர பிரஜைகளாக்கும் புது அரசியலமைப்பை உருவாக்கி இலங்கையை சிங்கள பௌத்த குடியரசாகப் பிரகடனப்படுத்தினர். இந்த அரசியலமைப்பைத் தயாரிக்கவென ஏற்படுத்தப்பட்ட அரசியல் நிர்ணய சபையில் தமிழர்கள் சார்பில் விடுக்கப்பட்ட ஆலோசனைகள், திருத்தங்கள் எவையும் பரிசீலனைக்குக்கூட எடுத்துக் கொள்ளப்படாமல் நிராகரிக்கப்பட்டன. எனவே தமிழர் கட்சிப் பிரதிநிதிகள் அரசியல் நிர்ணய சபையை விட்டு வெளிநடப்புச் செய்தனர். பின்னர் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் இல்லாத அரசியல் நிர்ணயசபை அங்கீகாரத்துடன் தமிழ் மக்களை இரண்டாம்தரப் பிரஜைகளாக்கும் புதிய அரசியலமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

## நவீன ஜாலியன் வாலாபாக்

*1974*ம் ஆண்டிலிருந்து புதிய முறையில் தமிழினத்தை அடக்கிவிடச் சிங்கள ஆட்சியாளர்கள் முன்வந்தனர். தமிழ் மக்களை சுட்டுத்தள்ளும் பொலீசாருக்கு உடனடியாக பதவி உயர்வு வழங்கி அவர்களை உற்சாகப்படுத்தினர் சிங்கள ஆட்சியாளர்கள். இதன் விளைவு *1974*ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மகாநாட்டில் தமிழின் சுவை கேட்டுக் கொண்டிருந்த ஒன்பது தமிழர்கள்



**யாழ்ப்பாணத்தில் 1974 ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழராட்ச்சி மாநாடு**



**நான்காவது உலகத தமழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் நிகழ்சியின் போது சிங்கள போலிசாரால் படுகொலை செய்யப்பட்ட அப்பாவித் தமிழரில் சிலர்.**

பொலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அந்த வெறியாட்டத்துக்குப் பொறுப்பாக இருந்த சந்திரசேகரா என்னும் சிங்கள உதவிப் பொலீஸ் அதிகாரிக்கு உடனடியாகப் பதவியுயர்வு வழங்கி அவனைப் பொலீஸ் அதிபராக்கியது சிங்கள அரசு.

*1976* பெப்ரவரி *2*ம் நாள் புத்தளம் பெரிய பள்ளிவாசலில் தொழுகை நடத்திய ஏழு இஸ்லாமியத் தமிழர்கள், நல்லூர்க் கந்தனை வழிபட்டு விட்டுத் திரும்பிய பரராசா, மலையகத் தமிழன் (இந்திய வம்சாவழி) சிவனு இலட்சுமணன், யாழ் வீதியில் இரண்டு தமிழர்கள், ரெயில் வண்டியில் பயணம் செய்த தமிழன், தமது வீடுகளில் உறங்கிக் கொண்டிருந்த ஏழு தமிழிளைஞர்கள், கடற்கரையில் காற்று வாங்க வந்த தமிழன், கொழும்பு வேகந்தை பள்ளி வாசலில் தொழுகை நடத்திய மூவர் என ஏராளமான தமிழர்களை சிங்கள இராணுவத்தினரும், பொலிசாரும் சுட்டுக் கொன்று சிங்கள அரசின் பாராட்டையும் பதவியுயர்வையும் பெற்றதோடு தமக்குப் பாதுகாப்பான இடங்களுக்கு இடமாற்றங்களையும் பெற்றுக் கொண்டனர்.

தமிழர்களைக் காரணமின்றிச் சுட்டுக் கொல்லும் பொலீசாரையும், இராணுவத்தினரையும் தட்டிக் கேட்க வேண்டிய ஆட்சியாளர் தட்டிக் கொடுத்துப் பதவியுயர்வு வழங்கி உற்சாகப்படுத்தினர். கடலில் வாழும் ஆமைகளைக் கொல்பவனை நீதிமன்றத்தில் நிறுத்தி ஆறு மாதம் சிறையில் தள்ளும் சிங்கள அரசு காட்டில் வாழும் விலங்குகளைச் சுடுபவனைச் சிறைக்கூடம் அனுப்பும் இலங்கை அரசு தமிழனைச் சுடுபவனைப் பாராட்டியது; பதவியுயர்வு தந்தது. ஈழத்தமிழன் உயிரை கடலாமையையும், காட்டு விலங்கையும் விடக் கீழாக மதிக்கின்றனர் இனவெறி பிடித்த சிங்கள ஆட்சியாளர்கள்.

ஆட்சியாளரின் இந்த ஒரு தலைப்பட்சமான நடவடிக்கை கடந்த கால் நூற்றாண்டு காலமாக, சிங்கள மக்களுடன் சம உரிமையுடன் சமஷ்டி அமைப்பின் கீழ் சேர்ந்து வாழலாம் என எண்ணியிருந்த தமிழர்களின் நம்பிக்கையைத் தகர்த்து விட்டது. தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் கையாண்ட ஒடுக்கு முறை இனவாதக் கொள்கைகளால் தமிழர்களின் அரசியல், பொருளாதார, கலாச்சார வாழ்வில் ஏற்பட்ட பாரதூரமான பாதிப்புகளே தமிழ் இளைஞர்களைப் புரட்சிகரப் போராட்டப் பாதையை முன்னெடுக்க நிர்ப்பந்தித்தன. படித்த தமிழ் இளைஞர்களுக்கு அரசாங்கத் துறையில் வேலைவாய்ப்புகள் பூரணமாக நிராகரிக்கப்பட்டபோது அவர்களுக்கு இருள்மயமான எதிர்காலம் மாத்திரமே மிஞ்சிக் கிடந்தது. சிங்கள அரசாங்கத்தின்



பாரபட்சமான தமிழர்களுக்கு எதிரான 'தரப்படுத்தல்' கல்விக் கொள்கையும், 'சிங்களம் மட்டும்' என்ற மொழிக் கொள்கையும்; தமிழ் மக்களின் உயர்கல்வி பெறுவதற்கான வாய்ப்பினையும், வேலைவாய்ப்பினையும் இல்லாமற் செய்துவிட்டது. மேலும் தமிழ் இளைஞர்களுக்கு எதிரான ஒடுக்குமுறையும் நாளாந்தம் மோசமாகிக் கொண்டிருந்தது. பொலீசாரும், இராணுவத்தினரும் தமிழ் இளைஞர்களைக் காரணம் இல்லாமலே கைது செய்தும், மோசமாகச் சித்திர்வதைகள் செய்தும், கொன்றும் அட்டூழியங்கள் இழைத்தனர். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் தமிழிளைஞர்களே அரச பயங்கரவாதத்துக்கு நேரடியாக இலக்காகி கொடூரமான, மனிதாபிமானமற்ற சித்திரவதைகளை அனுபவித்தனர்.

தொழில் வாய்ப்புகளும் உயர்கல்வி வாய்ப்புகளும் மறுக்கப்பட்ட நிலையில் ஏற்பட்ட விரக்தியும் தொடர்ச்சியான பொலீஸ், இராணுவ அட்டூழியங்களால் சினமும் கொண்ட தமிழ் இளைஞர்கள் தங்களது மோசமான இந்த வாழ்க்கை நிலைமைகளைப் பூரணமாக மாற்றியமைக்க ஒரு புரட்சிகர சோஷலிசப் போராட்டத்தின் மூலமே முடியும் என்பதை உணர்ந்து கொண்டனர். இளைய தலைமுறையினர் சரியாக உணர்ந்து கொண்டதைப் போல மோசமாகிக் கொண்டிருந்த தேசிய ஒடுக்குமுறையின் மத்தியில் தமிழ் மக்களுக்கு புரட்சிகர ஆயுதப்போராட்டம் மாத்திரமே ஒரே ஒரு தீர்வாக எஞ்சி நின்றது.

## தமிழ் மாணவர் பேரவை

இனவெறி பிடித்த சிங்கள அரசின் அடக்குமுறையை அகிம்சைப் போராட்டத்தினால் உடைக்க முடியாது என்பதை நன்குணர்ந்த தமிழிளைஞர்கள் *1970*ல் 'தமிழ் மாணவர் பேரவை' என்ற அமைப்பின் கீழ் சிங்கள ஆட்சியாளரை எதிர்த்துக் கிளர்ச்சியில் இறங்கினர். அரசுக்கெதிராக ஊர்வலம், ஆர்ப்பாட்டம், கொடும்பாவி எரிப்பு என்று ஆரம்பமானது தமிழ் இளைஞர் கிளர்ச்சி. இந்நிலையில் *1972*ம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்கவால் கொண்டுவரப்பட்ட, தமிழர்களை இரண்டாந்தரக் குடிமக்களாக்கிய புதிய குடியரசு அரசியலமைப்பு சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. அதற்கு எதிராக தமிழ்ப் பகுதிகளில் பெரும் எதிர்ப்புக்


கிளம்பியது. தமிழினத்தின் அடிமைச்சாசனம் போன்ற அந்த அரசியலமைப்புக்கு-தமிழ் மக்களின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில்-ஆதரவாக அரசியல் நிர்ணய சபையில் கையொப்பமிட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழினத் துரோகிகளாகக் கணிக்கப்பட்டனர்.

தமிழினத்தைக் காட்டிக் கொடுக்கும் துரோகிகளை அழிப்பதுதான் தமிழீழத்தை அடைவதற்கான போராட்டத்தின் முதற்படி என பல்வேறு ஊர்களிலும் தனித்தனிக் குழுக்களாகத் தமிழ் மாணவர் பேரவையினர் இயங்கினர். இவ்வாறு இயங்கியவர்களில் தீவிரமாக இயங்கிய சிவகுமாரன், சத்திய சீலன், தங்கத்துரை, திசவீரசிங்கம், பிரபாகரன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

## புதிய தமிழ்ப் புலிகள் (T.N.T)

இவ்வாறு துரோகிகளை அழிப்பதில் ஈடு பட்ட பல இளைஞர்களின் முயற்சிகள் ஆரம் பத்தில் வெற்றி பெறவில்லை. தமிழ் மாணவர் பேரவையில் முக்கிய பொறுப்பேற்றுச் செயற்பட்ட சத்தியசீலன் கைதானதைத் தொடர்ந்து தமிழ் மாணவர் பேரவை இயக்க அமைப்பு சீர்குலைந்தது. பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். பலர் தலை மறைவாகினர். நாட்டில் தமிழ் மக்களின் நிலை மோசமாகிக் கொண்டு போனது. தலைமறைவானவர்களில் பலர் மீண்டும் இயங்குவதற்குத் தயங்கி நின்றனர். அந்த நிலையில் அவர்களில் வயதில் குறைவானவராக இருந்த பிரபாகரன் ஒரு

பிரபாகரன்



சிலருடன் மீண்டும் இயக்கத்தைத் தீவிரப் படுத்தும் முயற்சியில் இறங்கினர். புதிய தமிழ்ப்புலிகள் (டி.என்.டி) என்ற பெயரில் இயக்கத்தை ஏற்படுத்திச் செயற்பட்டார். இயக்கத்துக்கு ஆதாரமாகப் பெறப்பட்ட பொதுப்பணத்தை, பொறுப்பிலிருந்த ஒரு சிலர் தவறான வழிகளில் பயன் படுத்தியதைக் கண்டு அவர்களை விலக்கி வைத்துவிட்டு தேர்ந்தெடுத்த ஒரு சில இளைஞர்களை மட்டும் வைத்துக்கொண்டு பிரபாகரன் இயக்க நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

## தமிழீழத்தின் நேதாஜி

இந்திய சுதந்திரப் போராட்டத்துக்காக நாட்டைவிட்டுத் தப்பி வெளிநாடு சென்று விடுதலைப்படையை அமைத்துப் போராடி வீர மரணமடைந்தவர் நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் அவர்கள். அதுபோலவே தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்காக இலங்கையி லிருந்து தப்பி தமிழ்நாட்டுக்கு வந்து தமிழீழ விடுதலைக்குப் போராட ஒரு ஆயுதப்படையை அமைக்க வேண்டும் என்ற ஆவலில் செயற் பட்டு தமிழ்நாட்டிலேயே தன்னுயிரையீந்தவர் அமரர் ஆ. இராசரத்தினம் அவர்கள். அதனால் தமிழீழத்தின் நேதாஜி என்று ஈழத்தமிழ் மக்களால் அழைக்கப்படுபவர்.

*1956*ம் ஆண்டு முதல் *1961*ம் ஆண்டு வரை இலங்கைத் தமிழரசுக் கட்சி மேற்கொண்ட தமிழர் உரிமைகளுக்கான அகிம்சைப் போராட்டங்கள் அனைத்திலும் சிங்கள அரசின் ஊழியனாக இருந்து கொண்டே ஈடுபாடு காட்டியவர் இராசரத்தினம் அவர்கள். சிங்களம் மட்டும் சட்டம் வந்ததைத் தொடர்ந்து தமிழ் அரசு ஊழியர்களுக்குத் தனியான மொழி வழித் தொழிற்சங்கம் அவசியம் எனக் கருதி "தமிழ் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தை" உருவாக்குவதில் முன்னின்று உழைத்தவர் அவர். இலங்கை அரசியலமைப்பின் 29வது விதியின்படி சிங்களம் மட்டும் சட்டம் சட்டவலுவற்றது என்று முன்னாள் நீதியரசர் திரு. கிறெற்சர் அவர்களால் தீர்ப்பளிக்கப்பட்ட 'கோடீஸ்வரன்' வழக்கில் தீவிர அக்கறை காட்டி உழைத்தார்.

*1961*ம் ஆண்டு தமிழீழமடங்கிலும் நடை பெற்ற அகிம்சை வழிப் போராட்டமான சத்தியாக்கிரகம், மறியல் போன்ற மக்கள் போராட்டங்கள் சிங்கள இனவாத அரசின் இராணுவ அடக்குமுறையால் முறியடிக்கப் பட்டது கண்டு உள்ளம் கொதித்து, அந்தக் கசப்பான அனுபவங்களினால் அகிம்சை வழியி லேயே நம்பிக்கை இழந்தார். தனிச் சிங்களச் சட்டத்தைத் தொடர்ந்து சிங்களம் படிக்க மறுத்து அரசாங்க வேலையிலிருந்து கட்டாய ஓய்வு பெற்றுக்கொண்ட திரு. இராசரத்தினம், அதன் பின்பு தமிழீழ புரட்சியாளர்களில் ஒருவராக மாறினர். எழுபதின் தொடக்கத்தில் இந்தியாவுக்கு வந்து தமிழ்நாட்டுத் தலைவர் களோடும் கட்சிகளோடும் தொடர்பை ஏற் படுத்திக் கொண்ட இராசரத்தினம் அவர்கள், *1972*ல் தமிழர் கூட்டணித் தலைவர் திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களை தமிழகத்துக்கு அழைத்து வந்து தலைவர்களையும் பத்திரிகையாளர்களையும் சந்திக்க வைத்து தமிழ் நாட்டுக்கு தமிழீழப் பிரச்னையை அறிமுகம் செய்து வைப்பதற்கு காரணகர்த்தா வாக விளங்கினர்.

*1973*ல் யாழ் பண்ணைப் பாலத்தில் வைத்து அன்றைய சிங்கள அரசின் கைக்கூலி அமைச்ச ரான குமாரசூரியர் சென்ற காரை குண்டு வைத்துத் தகர்க்க முயற்சித்தார் என்று கூறி சிங்களப் பொலீசார் இராசரத்தினத்துக்கு வலை விரித்தபோது, அந்த வலைக்குள் சிக்காமல் எப்படியோ தப்பி தமிழ்நாட்டுக்கு வந்த இராசரத்தினம் அவர்கள், தமிழீழ விடுதலையை வென்றெடுப்பதற்கு ஆயுதமேந்திப் போராடக் கூடிய கட்டுப்பாடான ஒரு புரட்சிகர இயக்கத்தைக் கட்டி எழுப்பும் அவாவில் தீவிர மாகச் செயற்பட்டார்.

அந்த நாட்களில் அமைப்பாளர்களில் ஒருவரான சத்தியசீலன் கைதானதைத் தொடர்ந்து தமிழ் மாணவர் பேரவை அமைப்பு சீர்குலைந்து உறுப்பினர்கள் பெரும் பாலானவர்கள் தலைமறைவாகி விட்ட நிலையில் தமிழகம் வந்திருந்த பிரபாகரனும், இராசரத் தினமும் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது். தமிழ் மாணவர் பேரவை சீர்குலைவிற்குப் பின் தலைமறைவானவர்கள் மீண்டும் இயங்குவதற் குத் தயங்கி நின்ற வேளையில் தமிழீழ விடுதலைக்காக ஒரு கட்டுப்பாடான விடுதலை அமைப்பை ஏற்படுத்தும் முயற்சியில் இறங்கி யிருந்த பிரபாகரனுக்கு இராசரத்தினம் அவர்களின் தொடர்பு புதிய நம்பிக்கையை



தமிழீழத்தில் நேதாஜி என்று அழைக் கப்பட்ட மறைந்த ஆ. இராசரதித்னம்

அளித்தது. ஆங்கிலத்திலிருந்த பல உலக விடுதலை வரலாறுகளையும் இராணுவ அமைப் புக்குத் தேவையான பல செய்திகளையும் தமிழில் மொழி பெயர்த்துக் கொடுத்தார் இராசரத்தினம் அவர்கள். அத்துடன் விடு தலைப்புலிகள் இயக்கத்தின் முன்னோடி இயக்க மான புதிய தமிழ்ப்புலிகள் இயக்கம் என்ற பெயர் வைக்கப்படுவதற்கும் அவரது ஆலோசனை மூல காரணமாக அமைந்தது.

## மாவீரன் சிவகுமாரன்

தமிழ் மாணவர் பேரவையின் ஆரம்பகர்த் தாக்களில் ஒருவரான உரும்பராயைச் சேர்ந்த பொன்னுத்துரை சிவகுமாரன் ஒரு சில இளைஞர்களைச் சேர்த்து சிங்கள அரசையும், தமிழ்த் துரோகிகளையும் எதிர்த்து தீவிர நடவடிக்கைகளில் இறங்கினர். *1971*ம் ஆண்டு தமிழினத்தின் உரிமைக்குரலை நசுக்க வட பகுதியில் சிறிமாவோ பண்டாரநாயக்க அரசின் தலைமைத் தரகராக இருந்து செயற் பட்ட யாழ் மேயர் அல்பிரட் துரையப் பாவைக் கொல்லும் முயற்சியில் இறங்கினன். அவன் வைத்த குறி தவறவில்லை. யாழ் பிரதான வீதியில் வைத்து துரையப்பாவின் காருக்குள் நேரக்கணிய வெடிகுண்டு (டைம் பாம்) வைத்தான். சக்தி வாய்ந்த அந்தக் குண்டு வெடித்த வேளையில் துரையப்பா காரில் இல்லாத காரணத்தினால் உயிர் தப்பினன். கார் சிதறிச் சின்னபின்னமானது. அதுபோன்று சிறிமாவோ பண்டாரநாயக்கா அமைச்சரவை யில் துணை அமைச்சராகச் செயலாற்றிய



சிவகுமாரன்



சிவகுமாரனின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட மக்கள் வெள்ளத்தில் ஒரு பகுதி.

சோமவீர சந்திர சிறியின் காருக்கும் வெடிகுண்டு வைத்தான். இந்த இரு நடவடிக்கைகளின் பேரில் பொலீசாரால் கைது செய்யப்பட்ட சிவகுமாரன் 3 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டான். அவனது நடவடிக்கைகளின் போது பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டுகள் மற்றும் கருவிகள் எவ்வாறு அவனுக்குக் கிடைத்தது என்று பதில் சொல்லுமாறு பொலீசாரால் சித்திரவதை செய்யப்பட்டான். இருந்தும் அவன் தனக்கு உதவியவர்கள் யாரையும் காட்டிக் கொடுக்கவில்லை. ஆட்சியாளரால் அவன் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட முடியாத நிலையில் சிவகுமாரன் விடுதலையானான்.

விடுதலையாகி வெளியே வந்த சிவகுமாரன் தன்னை மீண்டும் விடுதலைப் போராட்டத்தில் முழுமையாக அர்ப்பணித்தான். தமிழினத்தைப் பற்றிக் கொண்டிருந்த தீண்டாமை நோயை அகற்ற அதற்கான பிரச்சாரங்களிலும் சமபந்தி போசனம் போன்ற நடவடிக்கைகளிலும் நேரடியாக ஈடுபட்டான். அவன் ஊரான உரும்பராய் என்ற இடத்திலே சாதிவெறி பிடித்த நாகலிங்கம் நடராசா என்ற பெற்றோல் நிலைய உரிமையாளன் சிறிமாவோ கட்சிக்காரன், பொலீசாருக்குத் தகவல் தருபவன். சிவகுமாரன் தீண்டாமை ஒழிப்பு, சமபந்தி போசனம் போன்ற நடவடிக்கைகளினால் வெறி கொண்டு சிவகுமாரனும் அவனது தோழர்களும் அரசுக்கு எதிராகச் செயற்படுவது குறித்து பொலீசுக்குத் தகவல் கொடுக்கிறான்.

இது சிவகுமாரனுக்குத் தெரிய வருகிறது. போராட்டம் இடையூறின்றி நடைபெற வேண்டுமானால் துரோகி ஒழிக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்து அவன் மீது குறி வைத்தான் சிவகுமாரன். சிவகுமாரனும் அவனது தோழர்களும் அந்தத் துரோகியை ஒழிப்பதற்கு எடுத்த இரண்டு முயற்சிகளிலிருந்து துரோகி நடராசா தப்பி விடுகிறான்.

அதே காலத்தில்தான் (1974 ஜனவரியில்) யாழ்ப்பாணத்தில் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டின் இறுதி நாள் நிகழ்ச்சியின் போது மாநாடு பார்க்க வந்த ஒன்பது தமிழர்கள் பொலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டின் காரணமாகக் கொல்லப்பட்டனர். இதை நேரில் பார்த்த சிவகுமாரன் அந்தப் படுகொலைக்குக் காரணமான சிங்கள பொலீஸ் அதிகாரி சந்திரசேகரவைப் பழிக்குப் பழி வாங்குவதாகச் சபதமேற்று இரண்டு தடவைகள் முயற்சியில் இறங்குகிறான். சிவகுமாரனுடன் கூடச்சென்ற தோழர்களின் குறைபாடுகளினால் இரண்டு தடவைகள் எடுக்கப்பட்ட முயற்சியின் போதும் சந்திரசேகரா தப்பி விட்டான். இந்நிலையில் 1974ம் ஆண்டு ஜூன் மாதம் 5ம் நாள் கோப்பாய் என்ற இடத்தில் வைத்து பொலீசாரினால் சுற்றி வளைக்கப்பட்ட நிலையில் சிவகுமாரன் கையிலிருந்த துப்பாக்கியின் இறுதிக்குண்டு தீரும்வரை போராடி பொலீசாரிடம் கைதாகும் நிலை ஏற்பட்டதும் தன்னிடம் தயாராக வைத்திருந்த 'சயனைட்' விடத்தினை அருந்தி வீர மரணமடைந்தான்.

சிவகுமாரன் அமைப்பு ரீதியாகச் செயற்படாமல் தன் தோழர்களின் உதவியோடு செயற்பட்டான். சிங்கள ஆட்சியாளருக்கு எதிராக ஆயுதமேந்திப் போராடி முதற் களப் பலியானான் சிவகுமாரன். அவன் எண்ணியவற்றை அவன் வாழ்நாளில் நிறைவேற்ற முடியாமற் போயிருக்கலாம். ஆனால் தனது 24 வயதிற்குள் 3 ஆண்டுகளைச் சிறைக்கூடத்தில் கழித்த அவன் தன் இலட்சியத்துக்காக இறுதிவரை போராடி மாண்டான். ஈழத் தமிழருக்காக முதன் முதலில் ஆயுதப் போரில் தன்னுயிரை அர்ப்பணித்து ஈழத்தமிழ் இளைஞர்கள் மத்தியில் ஓர் எழுச்சியையும் உத்வேகத்தையும் ஏற்படுத்தி மறைந்தான் மாவீரன் சிவகுமாரன். அவனது போராட்ட அனுபவங்கள் பிற்கால இளைஞர்களுக்கும், இயக்கங்களுக்கும் பாடங்களாக அமைந்தன. அரசியல் தலைவர்களுக்கே அதுவரை நடைபெறாத அளவிற்கு மக்கள் பெருந்திரளாகக்கூடி அவ்வீர இளைஞனுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர். ஏராளமான தமிழ்ப்பெண்களும் மாணவிகளும் நடைமுறை மரபை எல்லாம் மீறிச் சுடுகாடு வரை சென்று அவ்வீர இளைஞனுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

## விடுதலைப் புலி இயக்கத்தின் தோற்றம்

அக்காலக்கட்டத்தில் புதிய தமிழ்ப்புலிகள் (டி.என்.டி) என்ற அமைப்பில் செயற்பட்ட வேலுப்பிள்ளை பிரபாகரன் கட்டுப்பாடு மிக்க இராணுவ அமைப்பு ஒன்றினால் மட்டுமே தமிழீழ விடுதலை சாத்தியம் என்பதை உணர்ந்து புதிய தமிழ்ப்புலிகள் அமைப்பைப் புனரமைத்து, அக்காலத்தில் சிறு சிறு குழுக்களாக இயங்கி வந்த இளைஞர்களையும் சேர்த்து 'தமிழீழ விடுதலைப் புலிகள்' என்னும் அமைப்பை ஏற்படுத்தினார். பிரபாகரன் இயக்க உறுப்பினர்கள் பலரையும் இயக்க இலட்சியத்தின் பேரிலும், இயக்க கட்டுப்பாடுகளின் பேரிலும் உறுதி எடுக்க வைத்து தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை ஏற்படுத்தினார். தமிழீழ விடுதலைப்புலிகளின் நோக்கம் வர்க்க பேதமற்ற தமிழீழ சமதர்மக் குடியரசை நிறுவுதல் என்பது. அமைப்பு ரீதியாக முதன் முதல் தோற்றுவிக்கப்பட்டதும், மிகவும் கட்டுப்பாடானதும் ஆக்க பூர்வமாகச் செயல்பட்டு வருவதும் பிரபாகரனால் ஆரம்பிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமே.

'பல நூறு ஆண்டுகளாக அந்நியரிடம் அடிமைப்பட்டு வாழ்ந்து வந்த ஒரு இனத்தின் மத்தியில் ஒரு விடுதலை இயக்கத்தைக் கட்டி வளர்ப்பது என்பது மிகவும் கடினமான ஒரு செயல்தான். முதலில் இனத்தின் மத்தியில் இருக்கும் காட்டிக் கொடுக்கும் நிலையை ஒழித்தாக வேண்டும். அதற்கு ஆரம்பத்தில் காட்டிக் கொடுப்பவர்களை ஒழித்தாற்றான் முடியும். விடுதலை இயக்கத்தை அரும்பும்போதே சிதைத்து விட வேட்டை நாய்கள் போல செயற்பட்ட பொலீஸ் உளவுப்படை அமைப்பைச் சீர்குலைத்தாக வேண்டும். அடுத்து மிகப்பெரிய ஆயுதப்படையைக் கொண்ட எதிரியை (அரசை) ஆயுதமற்ற எண்ணிக்கையில் குறைந்த ஒரு இனம் மோதுதற்கு கெரில்லாப் போர்முறை ஒன்றினால்தான் சாத்தியம் என்பதை அண்மைக்கால உலக வரலாறுகள் எடுத்துக் காட்டுகின்றன. எதிரி மீது பரந்த அளவில் மேற்கொள்ளப்படும் திடீர் தாக்குதல்களினால் எதிரியின் பொருளாதாரம் சிதைக்கப்பட்டு பலவீனப்படுத்தப்படும்' என்பதை எல்லாம் நன்கு சிந்தித்த பிரபாகரன் அதற்கு ஏற்றவாறு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் வேலைத்திட்டங்களை வகுத்தார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் ஆரம்ப கட்டத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கையை விட ஒழுங்கும் கட்டுப்பாடும் உள்ள உறுதியுமே தேவை என்று அதற்கு ஏற்றவாறு சொற்ப உறுப்பினர்களையே வைத்து இயக்கத்தைத் தொடங்கிய பிரபாகரன் தனித்தனிக் குழுக்களாக இயங்கி வந்தவர்களையும், இயக்கத்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே. பிரபாகரன்





திற்கு ஆதரவாளர்களாகச் செயற்பட்டு வந்தவர்களையும் தானே நேரிற் சென்று சந்தித்துப் பேசி தகுதியானவர்களை இயக்கத்திற் சேர்த்துக் கொண்டார். அத்துடன் இயக்கத்தின் ஒழுங்கு கட்டுப்பாட்டு விதிகளைக் கடுமையாக்கினுர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே உறுதியும், அர்ப்பணிப்பும், பேரார்வமும் கொண்ட இளம் புரட்சிவாதிகளை அது பெருமளவில் ஈர்த்துக் கொண்டது. நகர்ப்புற கெரில்லா அமைப்பாக உருவாக்கப்பட்டு தேசிய விடுதலைக்கான நீண்டகால மக்கள் யுத்தம் என்ற இலட்சியத்தில் தோய்ந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வெகு விரைவிலேயே தமிழ் மக்களின் புரட்சிகர ஆயுதப் போராட்ட இயக்கமாகப் பரிணமித்தது. விஞ்ஞான சோசலிசக் கோட்பாட்டை வரித்துக் கொண்ட புரட்சிகர விடுதலை இயக்கம் என்ற வகையில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தேசியப் போராட்டத்தின் முன்னணி ஆயுதப்படையாகத் தன்னை விரைவிலேயே ஸ்தாபித்துக் கொண்டது.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தோற்றமானது தமிழ் தேசிய சுதந்திரப் போராட்டத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு புதிய சகாப்தத்தைக் குறிக்கிறது. விடுதலைப் புலிகள் இயக்கமானது இதுகாலம் வரை நடைபெற்று வந்த தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தினைப் பரந்து பட்ட மக்களின் ஆயுதப் போராட்டம் என்ற நிலைக்கு விஸ்தரித்தது.


கடந்த 10 ஆண்டுகளாக விட்டுக் கொடுக்காது, தொடர்ச்சியாக, தீர்க்கமாக விடுதலைப் புலிகள் நடத்திய கெரில்லாத்தாக்குதல்கள் அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் கணிசமான அளவு ஈழத்தமிழ் மக்களது போராட்டத்தை முன்னெடுத்திருக்கின்றது. அரச ஆயுதப்படைகளைக் கிலி கொள்ளச் செய்து அவர்களது மனுேவுறுதியையும் கட்டுப் பாட்டையும் குலைத்து விட்ட விடுதலைப்புலிகளது கெரில்லாப் போர்முறையானது சிறீலங்கா அரசு அமைப்பையே ஆட்டங் காணச் செய்திருப்பதுடன் தமிழர் பிரச்சினையை சர்வதேசமயப் படுத்தவும் உதவியுள்ளது.

இயக்கத்தையும், இனத்தையும் காட்டிக் கொடுக்க முனைந்த இனத் துரோகிகளையும், வேட்டையாட முனைந்த பொலீஸ் உளவுப் படையையும் சின்னுபின்னமாக்கிய தமிழீழ விடுதலைப்புலிகள் அடுத்த கட்டமாக சிங்கள இராணுவப்படைகள் மீது தாக்குதல்களை மேற் கொண்டனர். ஆங்காங்கே சிங்கள இராணுவப் படைகள் மீது விடுதலைப்புலிகளின் கெரில்லாப் போராளிகள் மறைந்திருந்து தாக்கியும் நேர் நின்று போரிட்டும் பலத்த சேதங்களை ஏற்படுத்தினர். அந்தப் படையின் மத்தியில் பீதியும், மரணபயமும், ஒழுங்கீனமும் கட்டுப்பாடின்மையும் உருவாகின. கூலிப் பட்டாளத்துக்கே உரிய கோழைத்தனமும் தப்பியோடும் மனுேபாவமும் வேரூன்றின; பலர் இராணுவ சேவையைவிட்டே விலகியோடினர். தமிழ்ப் பகுதிகளில் சேவையில் ஈடுபடும் இராணுவத்தினருக்கு மேலதிக ஊதியத்தையும் விசேட வசதிகளையும் அரசு வழங்கியது. அரசியல் ரீதியாக தமிழ் மக்கள் மத்தியில் இயக்கத்தைக் கட்டி எழுப்பும் பணியும், மக்களை அரசியல் மயப்படுத்தும் பணியும் தீவிர முற்றன. தமிழீழ விடுதலைப்புலிகளது அரசியல் அணியின் தொடர்ச்சியான கடின உழைப்பால் தமிழீழமெங்கும் தலை மறைவு கெரில்லாத்தளங்களை அமைப்பது விரைவிலேயே சாத்தியமானது. மேலும் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், பேரறிஞர்கள் எல்லாம் இணைந்து செயற்படத் தொடங்கினர்.


மக்களுடன் வாழ்ந்து, நாளாந்தம் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தாமும் முகம் கொடுத்து அவர்களின் சுக துக்கங்களில் பங்கு கொண்டு, தேசியப் போராட்டத்தில் அவர்களுடன் சேர்ந்து உழைப்பதில் தமிழீழ விடுதலைப்புலிகள் பெரும் அக்கறை கொண்டு செயற்பட்டனர்.

காலத்துக்கும், சூழ்நிலைக்குமேற்ப தமிழீழ விடுதலைப்புலிகள் முன்னெடுத்த ஆயுதப் போராட்டமானது சிங்களப் பேரினவாத அரசின் மீதும், இலங்கையின் பொருளாதாரத்தின் மீதும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தின. தமிழீழ மண்ணில் சிங்கள ஆட்சியாளரின் நிர்வாகம் பூரணமாக நிலை குலைந்தது; அரசுத்துறை அலுவலகங்கள் அனைத்தும் செயலிழந்தன; வங்கிகள் மூடப் பட்டன; பொலீஸ் நிலையங்கள் மூடப்பட்டன. அரச அமைப்பே முழுமையாகச் சீர்குலைந்தது. சிறீலங்கா மிக மோசமான அரசியல், சமூக நெருக்கடிகளை எதிர்நோக்கியது. தொடர்ச்சியாக நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களினுல் சிறீலங்காவின் பொருளாதாரம் சீரழிந்தது.

சிறீலங்கா அரசுக்கு பொருளாதார உதவிகளைச் செய்து வந்த பல நாடுகள் நாட்டில் உள்ள அமைதியின்மையைச் சுட்டிக்காட்டித் தமது பொருளாதார உதவிகளை நிறுத்தின. இதனுல் சிங்கள அரசு தன் பற்ருக்குறை பட்ஜெட்டுக்களை ஈடுகட்ட முடியாமலும், பொருளாதாரத் திட்டங்களை மேற்கொள்ள முடியாமலும் திண்டாடியது. 1976ம் ஆண்டு தனது பட்ஜெட்டில் பாதுகாப்புத் துறைக்கு வெறும் 36 கோடி ரூபாயை மட்டுமே ஒதுக்கிய சிறீலங்கா அரசு 1985ம் ஆண்டு 560 கோடி ரூபா ஒதுக்கியும் போதவில்லை என்று தேசிய



தமிழீழ விடுதலைப் புலிகள்







பாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலி அலறுகிறார். பொருளாதார நிலையில் சீர் கெட்டிருக்கும் சிறீலங்கா அரசு, பாதுகாப்புத் துறைக்கென 200 கோடி என்றும், 84 கோடி என்றும் பல இடைக்கால குறை நிரப்புத் தொகை பட்ஜெட்டுக்களை ஏற்படுத்த வேண்டிய கட்டாயத்துக்குள்ளாகியது. சிறீலங்காவின் நிதி அமைச்சர் ரொனி டி மெல் கஜானா காலியாகி விட்டது என்று கைவிரிக்கின்றார்; பிச்சை கேட்டு உலக வலம் வருகிறார்.

எல்லாவற்றிற்கும் மேலாக விடுதலைப்புலிகளின் இடைவிடாதத் தாக்குதல்களினால் கிலியுற்ற சிங்கள இராணுவத்தினர் தமிழ்ப் பகுதிகளுக்குச் செல்ல மறுக்கின்றனர். இராணுவத்தினரின் பெற்றோர்கள், "தங்கள் பிள்ளைகளைக் கொலைக்களத்துக்கு அனுப்பாதீர்கள்" என்று அத்துலத் முதலியின் அலுவலகத்தை முற்றுகையிடுகின்னர். ஆக விடுதலைப்புலிகளின் விடுதலைப்போர் சிங்கள ஆளும் வர்க்கத்தையும், சர்வாதிகார அரசினையும் ஆட்டங்காணச் செய்தது. இந்த விடுதலைப்போரை உலகுக்கு 'பயங்கரவாதம்' என்று காட்ட முயன்ற சிறீலங்கா அரசின் போலி நாடகம் அரங்கேறவில்லை. தமிழீழ விடுதலைப்புலிகளின் தொடர்ச்சியான ஆயுதப் போராட்டம் யதார்த்த நிலையை உலகுக்குத் தெளிவாக எடுத்துக் காட்டியது.

ஆரம்பத்தில் நான்கைந்து இளைஞர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் அதன் தலைவரும் இராணுவத் தளபதியுமான வே. பிரபாகரனின் வழி நடத்தலின் கீழ் படிப்படியாக வளர்ந்து இன்று உலக அரங்கிலே குறிப்பிடத்தக்க முக்கியமான விடுதலை இயக்கமாக வளர்ந்துள்ளது. முதலில் துரோகிகளை ஒழிப்பது, அடுத்து இயக்க வளர்ச்சிக்கு இடையூறாக இருக்கும் பொலீஸ் உளவுப் படையைச் சிதைப்பது. பின் பரந்த அளவில் தாக்குதலை நடத்தி சிங்கள ஆட்சியாளரின் ஆயுதப் படையையும், பொருளாதார நிலையையும் நிலைகுலைய வைப்பது என்று திட்டமிட்டு நடைமுறைப்படுத்திய செயற்பாட்டினால் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழீழத்தில் சிங்கள ஒடுக்குமுறை ஆட்சியாளருக்கெதிராக மாபெரும் வெற்றியை ஈட்டி வருகிறது.

தகுதி வாய்ந்த தலைவனின் (வே. பிரபாகரனின்) வழி நடத்தலாலும், இயக்க வீரர்களின் வீரமிக்க தியாக உணர்வினாலும் வெகு விரைவில் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது இலட்சிய தாகமான தமிழீழத்தை மலர வைப்பார்கள் என்பது உறுதி.

# விடுதலைப் புலிகளின் போராட்டக் களங்கள்

தமிழீழ விடுதலைப் புலிகளின் வரலாறு தான் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாறு என்று கூறுமளவுக்கு சிங்கள ஆயுதப் படையினருக்கு எதிராக தமிழீழ விடுதலைப் புலிகள் உறுதியான, தொடர்ச்சியான, வெற்றிகரமான தாக்குதல் நடவடிக்கைகளையும், அரசியல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் பல அத்தியாயங்களைத் தொடக்கி வைத்து வருபவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள்தான்.

துரோகிகளை அழித்தது, தம்மை வேட்டையாட முனைந்த இரகசியப் போலிஸ் படை மீது வெற்றிகரமான தாக்குதல்களை நடத்தியது, எதிரிகளின் ஆயுதங்களைக் கைப்பற்றி எதிரிகளுக்கு எதிராகப் பயன்படுத்தியது, சிங்கள இராணுவத்துக்கு எதிராக முதன் முதல் தாக்குதலை மேற்கொண்டது என்பன தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடக்கி வைத்த அத்தியாயங்களாகும். உள்ளூராட்சித் தேர்தலைப் பகிஷ்கரிக்கும் இயக்கத்தை வெற்றிகரமாக நடத்தியதன் மூலம், தமிழீழக் கோஷத்தை முன் வைத்து பதவிக்கு வந்த "தமிழர் விடுதலை"க் கூட்டணியினர் மக்களை ஏமாற்றி ஆடி வந்த கபட நாடகத்தை அம்பலத்துக்குக் கொண்டு வந்து மக்களிடமிருந்து அவர்களை விரட்டியடித்தது தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மிகப் பெரிய அரசியல் நடவடிக்கையாகும்.

சிவில் நிர்வாகம் முற்றாகச் சீர்குலைந்திருக்கும் நிலையில் தமிழ் மக்களின் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதிலும் தீர்க்கமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதப் படையினருக்கெதிராக தொடர்ச்சியாக இதுவரை நூறுக்கும் அதிகமான தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். தமிழ் மக்களின் ஏகோபித்த நம்பிக்கையைப் பெற்ற விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்கள் பற்றிய விபரங்களைக் கீழே தருகிறோம்.

* புதியதமிழ்ப்புலிகளாக முதலில் தொடங்கிய தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் 1975ம் ஆண்டு ஜூலை மாதம் 27ம் நாள், அன்றைய ஆட்சியாளரின் தலைமைத் தரகராகச் செயற்பட்டு தமிழின விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த அன்றைய யாழ் நகர மேயர் அல்பிரட் துரையப்பாவைச் சுட்டுக் கொன்றதன் மூலம் நமது இலக்குக்கான பாதையில் முதல் அடியை எடுத்து வைத்தது.

* 5.3.76 அன்று, புத்தூர் மக்கள் வங்கியிலிருந்து ஐந்து லட்சம் ரூபா பணத்தையும், அங்கிருந்த நகைகளில் ஒரு பகுதியையும் தமது தேவைகளுக்காக கையகப்படுத்திய விடுதலைப்புலிகள் அந்தப் பணத்தைக் கொண்டு தமிழீழத்தின் விடுதலைக்காக ஆயுதமேந்திய முதலாவது இராணுவக் கட்டுப்பாடு மிக்க இயக்கத்துக்கு அத்திவாரமிட்டனர்.

**விடுதலைப் புலிகளின் முதல் தாக்குதலுக்குள்ளான துரோகி துரையப்பா.**





**சிவகுமாரனை காட்டிக் கொடுத்த நா. நடராசா.**

* *2.7.76* அன்று, விடுதலை வீரன் சிவகுமாரன் சாதி ஒழிப்பு முயற்சியில் தீவிரமாக ஈடுபடுவதைக் கண்டு பொறுக்க முடியாது — சாதி வெறி பிடித்து — அவனை வன்முறையாளனென சிங்கள அரசுக்குக் காட்டிக் கொடுத்ததுடன், தொடர்ந்தும் விடுதலைப் போரில் ஈடுபட்டு வந்த தமிழிளைஞர்களைப் போலீசாருக்குக் காட்டிக் கொடுத்து வந்த உரும்பராயைச் சேர்ந்த பெற்றோல் நிலைய அதிபர் நாகலிங்கம் நடராசாவை விடுதலைப் புலிகள் குண்டு வீசிக் கொன்றனர்.

* *14.2.77* அன்று, காங்கேசந்துறைப் போலீஸ் நிலையத்தைச் சேர்ந்த இரகசியப் போலீஸ் கான்ஸ்டபிள் ஆ. கருணாநிதி (P.C. 3164) மாவிட்டபுரத்தில் வைத்து விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டான். இரகசியப் போலீஸ் படையை அழிக்கும் முயற்சியில் விடுதலைப் புலிகளின் கன்னிமுயற்சி இதுவாகும்.

* *18.5.77* அன்று, காங்கேசந்துறைப் போலீஸ் நிலையத்தைச் சேர்ந்த சண்முகநாதன் (P.C. 753) வல்வெட்டித்துறைப் போலீஸ் நிலையத்தைச் சேர்ந்த வி. சண்முகநாதன் (P.C. 6105) ஆகிய இரு இரகசியப் போலீஸ் கான்ஸ்டபிள்களை விடுதலைப்புலிகள் இணுவிலில் வைத்துச் சுட்டுக் கொன்றனர்

* *27.1.78* அன்று, தமிழீழம் என்னும் குறிக்கோளை முன்வைத்து தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டு, பாராளுமன்ற உறுப்பினரான ஒரு மாதத்திற்குள்ளாகவே அமைச்சர் பதவிக்காகக் கட்சி மாறி ஆளும் கட்சியில் சேர்ந்து தமிழீழக் கோரிக்கையை எதிர்த்து வந்த கனகரத்தினம் என்னும் பாராளுமன்ற உறுப்பினரை கொழும்பில் அவரது வீட்டிற்கு அண்மையில் வைத்து விடுதலைப் புலிகள் துப்பாக்கியால் சுட்டனர்.

* *7.4.78* அன்று, இரகசியப் போலீஸ் தலைமையகத்திலிருந்து முருங்கன் மடு ரோட்டுக்கு அண்மையிலுள்ள விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாமுக்குள் இயந்திரத் துப்பாக்கி (S.M.G), சுழல் துப்பாக்கி (Revolver), கைத் துப்பாக்கி (Pistol), வேட்டைத் துப்பாக்கி (Shot Gun) போன்ற ஆயுதங்களுடன் வயர்லஸ் சாதனங்களை உள்ளடக்கிய மோட்டார் வண்டியில் சென்ற இரகசியப் போலீஸ் இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை தலைமையிலான போலீஸ் கோஷ்டியுடன் விடுதலைப்புலிகள் நேரடியாகச் சண்டையிலீடுபட்டு அவர்கள் அனைவரையும் சுட்டுக் கொன்றனர். இச் சண்டையில் விடுதலைப் புலிகள் தமக்கு எவ்வித இழப்புமின்றி போலீசார் கொண்டுவந்த ஆயுதங்களையும், வயர்லஸ் கருவிகளையும் கைப்பற்றியதுடன் தாங்கள் தப்பிச் செல்ல போலீசாரின் காரையே எடுத்துச் சென்றனர்.

**புலிகளை வேட்டையாட புலிகள் இருந்த முகாமுக்குள் வந்து புலிகளால் கொல்லப்பட்ட இரகசியப் போலீஸ் இன்ஸ்பெக்டர் பஸ்தியாம் பிள்ளை,**



* *25.4.78* அன்று, அதுநாள்வரை விடுதலைப் புலிகள் இயக்கம் நடத்திய தாக்குதல் நடவடிக்கைகள் பற்றிய உரிமை கோரும் கடிதங்களைப் பத்திரிகைகளுக்கு அனுப்பி வைத்தன. விடுதலைப் புலிகளின் உரிமை கோரும் கடிதம் பத்திரிகைகளில் வெளி வந்ததைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்து பாராளுமன்றத்தில் ஜெயவர்த்தன அரசு ஒரு சட்டமூலத்தைக் கொண்டு வந்தது.


* *7.9.78* அன்று, சிங்கள மொழிக்கும், பௌத்த மதத்துக்கும் முதலிடம் கொடுத்துத் தமிழினத்தை அடிமைப்படுத்தி ஜெயவர்த்தனவால் கொண்டு வரப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு தமிழினத்தின் எதிர்ப்பை உலக அரங்கில் எடுத்துக் காட்ட, புதிய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த அதே நாள், அதே நேரம் இலங்கை அரசின் போக்குவரத்து நிறுவனமான ஏயர் சிலோனின் போக்குவரத்து விமானமான ஆவ்ரோ விமானம் ஒன்றை விடுதலைப் புலிகள் கொழும்பு இரத்மலானை விமான நிலையத்தில் நேரக்கணிய வெடிகுண்டு (டைம் பாம்) வைத்துக் தகர்த்தனர். விமானத்தைத் தகர்த்த ஐந்து நிமிடங்களுக்குள் இலங்கை அரசுக்கும், இலங்கையிலுள்ள சகல வெளிநாட்டுத் தூதரகங்களும் விமானத்தைத் தகர்த்தது குறித்து விடுதலைப் புலிகள் உரிமை கோரும் கடிதங்களைக் கையளித்தனர். இந்நடவடிக்கையினால் சர்வதேச அரங்கின் கவனத்தைத் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஈர்த்தது.


* அதையடுத்து, விடுதலைப் புலிகளின் ஆவ்ரோ விமானத் தாக்குதல் பற்றி போலீசுக்குத் தகவல் தந்த பாலா என்னும் மெக்கானிக்கை சுன்னாகத்திலுள்ள அவனது தொழிலகத்தில் வைத்து விடுதலைப் புலிகள் சுட்டுக் கொன்றனர்.

* *5.12.78* அன்று, விடுதலைப் புலிகள் தமது இயக்கத்துக்கான பணத்தேவைகளுக்காக சிங்கள அரசுக்குச் சொந்தமான யாழ் திருநெல்வேலி மக்கள் வங்கியிலிருந்து *11.68* இலட்சம் ரூபாவை கையகப் படுத்தினர். அப்போது ஏற்பட்ட மோதலில் இரு போலீசார் கொல்லப்பட்டனர். மேலும் ஒரு போலீஸ் கான்ஸ்டபிள் காயமுற்றான். அவர்களிடமிருந்த ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

* *15.10.81* அன்று, தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கிய பிரிகேடியர் வீரதுங்கா சிங்கள இராணுவத்தின் மேஜர் ஜெனரலாக பதவியேற்ற தினத்தன்று விடுதலைப் புலிகள் லெப்டினன்ட் ஆசீர் சீலனின் (சார்ள்ஸ் அன்ரனி) தலைமையில், யாழ்ப்பாணத்தில் இராணுவ ஜீப் ஒன்றின் மீது தாக்குதலை நடத்தினர். இத்தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும் ஒருவன் காயமடைந்தான். அவர்களிடமிருந்த ஆயுதங்களும் கைப்பற்றப் பட்டன. சிறீலங்கா இராணுவப் படைகளுக்கெதிராக தமிழீழத்தில் முதலில் நடத்தப்பட்ட தாக்குதல் நடவடிக்கை இதுவாகும்.

**விடுதலைப் புலிகளால் விமான நிலையத்தில் வைத்து தகர்க்கப்பட்ட ஆவ்ரோ விமானம்.**






**2-7-82 அன்று நெல்லியடியில் விடுதலைப் புலிகள் தாக்குதலில் சேதமுற்ற போலீஸ் ஜீப் வண்டியும் கொல்லப் பட்ட போலீசாரும்.**

* 2.7.82 அன்று, நெல்லியடியில் ரோந்து சென்று கொண்டிருந்த போலீஸ் படைமீது விடுதலைப் புலிகள் நடத்திய மின்னல் வேகத் தாக்குதலில் நான்கு போலீசார் அந்த இடத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டதுடன் மேலும் மூன்று போலீசார் படுகாயமுற்றனர். இத்தாக்குதலில் விடுதலைப்புலிகள் தமக்கு எவ்வித இழப்புமின்றி போலீசாரின் ஆயுதங்களையும் கைப்பற்றினர்.

* 29.9.82 அன்று, ஜெயவர்த்தனவின் யாழ்ப்பாண விஜயத்தை எதிர்க்கு முகமாக பொன்னாலைப் பாலத்திற்கருகில் வரிசையாக வந்து கொண்டிருந்த கடற்படை வாகனங்கள் மீது விடுதலைப் புலிகள் திட்டமிட்டு நடத்திய குண்டு வெடிப்பில் வாகனங்களில் வந்த கடற்படையினர் மயிரிழையில் உயிர்தப்பினர். குண்டு வெடித்த அதிர்ச்சியில் பாலம் சேதமுற்றது.

**சாவகச்சேரி போலீஸ் நிலையத் தாக்குதலில் பலியான போலீஸ் அதிகாரி.**



* 27.10.82 அன்று, அதிகாலை, விடுதலைப் புலிகள் ஆயுதத் தேவைக்காக சாவகச்சேரி போலீஸ் நிலையத்தின்மீது ஒரு திடீர்த் தாக்குதலை மேற்கொண்டனர். அத்தாக்குதலின் போது நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் மூன்று போலீசார் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும், பல போலீசார் காயமடைந்தனர். மீதிப் பேர் தப்பி ஓடினர். விடுதலைப் புலிகள் தரப்பிலும் மூன்று வீரர்கள் காயமுற்றனர். அங்கிருந்து பத்தொன்பது றிப்பீற்றர் துப்பாக்கிகள், ஒன்பது .303 ரக ரைபிள்கள், இரண்டு உப இயந்திரத் துப்பாக்கிகள், இரண்டு வேட்டைத் துப்பாக்கிகள், ஒரு ரிவால்வர் உட்பட முப்பத்தி மூன்று ஆயுதங்களையும் ரவைகளையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

* 15.12.82 அன்று, தொடரும் துரோகத்தை வேரறுப்பதற்காக, ஜெயவர்த்தன கட்சி அமைப்பாளராக இருந்து தமிழிளைஞர்களைக் காட்டிக் கொடுத்து வந்த புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த தம்பாப்பிள்ளையை விடுதலைப் புலிகள் அவனது கடையில் வைத்துச் சுட்டுக் கொன்றனர்.

* அடுத்து பல சமூக விரோதச் செயல்களைச் செய்து போலீசாரால் தேடப் பட்ட பாபு என்றும் கேடி இயக்கத்தின் பெயரைச் சொல்லித் தப்பித்து வந்ததால் நாயன் மார்கட்டில் வைத்து அவனை விடுதலைப் புலிகள் பகிரங்கமாகச் சுட்டுக் கொன்றனர்.

* 18.2.83 அன்று, தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற (நியமன) உறுப்பினரான ஆலாலசுந்தரத்தை — அவரது சமூக விரோதச் செயல்களுக்காகவும், விடுதலைப் புலிகளின் மீது தமிழ் மக்கள் வெறுப்படைய வேண்டுமென்பதற்காக அவர் மேற்கொண்ட விசமப் பிரசாரத்தை நிறுத்தும்படி எச்சரித்தும் அவரின் வீட்டில் வைத்து விடுதலைப்புலிகள் காலில் துப்பாக்கியால் சுட்டு எச்சரித்தனர்.

* 4.3.83 அன்று, பரந்தனுக்கு அருகே உமையாள்புரத்தில் இராணுவ வாகனங்கள் மீது விடுதலைப்புலிகள் தாக்குதலை மேற் கொண்டனர். ஒரு மணி நேரத்துக்கும் மேலாக நேரடியாக நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் சிங்கள இராணுவத்தினர் ஐவர் காயமுற்றனர். இராணுவக் கவச வண்டி ஒன்றும் சேதமடைந்தது. சிங்கள இராணுவத்தினர் காயமடைந்தவர்களுடன் பின்வாங்கி ஓடினர்.

* 2.4.83 அன்று, விடுதலைப் புலிகளை அழித்து ஒழிப்பதற்கு ஒரு செயற் திட்டத்தை உருவாக்க என இராணுவ, பொலீஸ் படைகளின் உயர் அதிகாரிகள் கலந்து கொள்ளும் மாநாடு நடைபெறவிருந்த யாழ் செயலக மாநாட்டு மண்டபத்தை விடுதலைப் புலிகள், மாநாடு நடைபெறுவதற்கு சில மணி நேரத்திற்கு முன்னதாகவே வெடிகுண்டுகள் வைத்துத் தகர்த்தனர். இக்குண்டு வெடிப்பினால் மாநாட்டு மண்டபத்தின் வடக்கு கிழக்கு பகுதிகள், செயலக நிர்வாகப் பகுதி, கணக்குப் பகுதி, பெண் ஊழியர் ஓய்வு நேரத்தில் தங்கும் பகுதி, பதிவுப் புத்தகங்கள் இருந்த பகுதி என்பனவ சேதமடைந்தன. மண்டபத்திற்கருகில் நிறுத்தப்பட்டிருந்த பல ஜீப் வண்டிகள் முற்றாக எரிக்கப்பட்டன.

* 29.4.83 அன்று ஜெயவர்த்தன கட்சி வேட்பாளர்களாக தமிழீழத்தில் தேர்தல் களத்தில் குதித்தவர்களுக்கு ஒரு படிப்பினையாக பருத்தித்துறை, சாவகச்சேரி நகர சபைகளுக்கு முதன்மை வேட்பாளர்களாகப் போட்டியிட்டவர்களையும், யாழ் மாவட்ட ஜெயவர்த்தன கட்சி அமைப்பாளரின் மெய்காப்பாளரையும் விடுதலைப்புலிகள் வெவ்வேறு இடங்களில் ஒரே நேரத்தில் சுட்டுக் கொன்றனர்.

* 6.5.83 அன்று, தமிழீழ விடுதலைக்காக அயராது உழைப்போம் என்று கூறி தமிழ் மக்களின் அங்கீகாரத்தைப் பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அதற்காகப் போராடாது; அது பற்றிப் பேசாது ஐக்கிய இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டதுடன் மீண்டும் சிறீலங்கா அரசு அமைத்த தேர்தல் களத்தில் குதித்து தொடர்ந்தும் போலி வாக்குறுதிகளைக் கூறி தமிழ் மக்களை ஏமாற்றி உள்ளூராட்சி மன்றப் பதவிகளையும் கைப்பற்றிவிடலாம் என்றிருந்தவர்களுக்குப் படிப்பினையாக — விடுதலைப் புலிகள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபரும், ஐக்கிய இலங்கையின் எதிர்க் கட்சித் தலைவருமான அமிர்தலிங்கம் பேசிய தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் புகுந்து மக்களைக் கலைந்து செல்லுமாறு கூறி அமிர்தலிங்கத்தின் காரையும் கடத்திச் சென்று சிதைத்தனர்.

* 18.5.83 அன்று, உள்ளூராட்சித் தேர்தலின் போது கந்தர்மடம் வாக்குச் சாவடியில் கூட்டுக்காவலில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரிடமும், போலீசாரிடமும் நேரடியாகச் சவால் விட்டுக் களத்தில் இறங்கிய விடுதலைப் புலிகள் 10 நிமிடங்களுக்கும் அதிகமாக நடத்திய துப்பாக்கிச் சமரில் இராணுவ கோப்ரல் ஜயவர்த்தன கொல்லப் பட்டான். மேலும் ஒரு இராணுவ கோப்ரலும், 2 போலீசாரும் படுகாயமுற்றனர். அச்சமரின் போது T 56 ரக தானியங்கி ரைபிள் ஒன்றையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

* 4.5.83 அன்று, இராணுவத்துக்கு எவரையும் கண்ட இடத்தில் சுடுவதற்கும், சுட்டபின் உடலைப் புதைப்பதற்கும் அனுமதிக்கும் புதிய அடக்குமுறைச் சட்டத்தைப் பிறப்பித்த ஜெயவர்த்தன அரசுக்கு, எந்தச் சட்டத்தைப் போட்டும் விடுதலைப்புலிகள் இயக்கத்தை அழித்துவிட முடியாது என்பதை உணர்த்துமுகமாக இராணுவத்துக்கு அதிகாரம் வழங்கும் சட்டம் கொண்டு வரப்பட்ட ஒரு சில மணி நேரத்தில் ஜெயவர்த்தன கட்சி சார்பில் தேர்தலில் போட்டியிட்டவரும், ஜெயவர்த்தன கட்சியின் தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவருமான சின்னத்தம்பி திலகரை விடுதலைப் புலிகள் சுட்டுக் கொன்றனர்.

* அடுத்து, ஜெயவர்த்தன கட்சியைச் சேர்ந்த இராஜசூரியரும் அவரது மகனும் விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப் பட்டனர். ஜெயவர்த்தன அரசால் இராஜ சூரியரின் பாதுகாப்பிற்கென வழங்கப்பட்ட .38 ஸ்பெசல் சுழல் துப்பாக்கியையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

* 23.7.83 அன்று, நள்ளிரவு திருநெல்வேலியில் ரோந்து வந்த இராணுவ வண்டிகளுக்கு கண்ணி வெடி வைத்து விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இருவர் காயமுற்றனர். ஏராளமான ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. விடுதலைப் புலிகள் தரப்பில் லெப்டினன்ட் செல்லக்கிளி வீர மரணமடைந்தான்.





திருநெல்வேலியில் விடுதலைப் புலி களால் கொல்லப்பட்ட 13 சிங்கள இராணுவத்தினர்.

விடுதலைப் புலிகளால் நிர்மூலமாக்கப் பட்ட இராணுவ முகாம்.



* 24.2.84 அன்று, யாழ்ப்பாணத்தில் சிங்கள இராணுவத்தின் கோட்டையாக விளங்கிய குருநகர் இராணுவ முகாம் விடுதலைப்புலிகளால் வெடிகுண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

* 20.3.84 அன்று, தேசியப் பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்ற லலித் அத்துலத் முதலி உயர்மட்ட பந்தோபஸ்து மாநாட்டுக் காக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அன்று, பருத்தித்துறைப் போலீஸ் நிலையத்தைச் சேர்ந்த சிங்கள அதிரடிப் போலீஸ் படையினர் மூவர் விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப் பட்டனர்.

* 9.4.84 அன்று. யாழ் ரெயில் நிலையத்திலிருந்து 300 யார் தூரத்தில் வைத்து விடுதலைப் புலிகள் இராணுவ வண்டி மீது நடத்திய கண்ணி வெடித் தாக்குதலில் 15 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இராணுவ டிரக் வண்டி முற்றுகச் சேதமுற்றது.

* 10.4.84 அன்று, விடுதலைப் புலிகள் பொதுமக்களின் ஆதரவோடு பருத்தித்துறை போலீஸ் நிலையத்தைத் தாக்கி எரியூட்டிய துடன் அங்கிருந்த முக்கிய குறிப்புப் புத்தகங் களையும் கைப்பற்றினர்.

* 2.5.84 அன்று. யாழ் விசேட போலீஸ் பிரிவைச் சேர்ந்த சார்ஜன்ட் நவரத்தினம், சப் இன்ஸ்பெக்டர் பதவிக்காக விடுதலை இயக்கங் கள் பற்றிய தகவல்களை அரசுக்குக் கொடுத்து வந்ததால் பருத்தித்துறை பஸ் நிலையத்தில் வைத்து விடுதலைப் புலிகள் அவனைச் சுட்டுக் கொன்றனர்.

* 4.5.84 அன்று, விடுதலைப் புலிகள் இயக்க லெப்டினன்ட் ஆசிர் சீலன் காட்டிக் கொடுக்கப்படுவதற்குப் பொறுப்பாளியாக விருந்த சாவகச்சேரி போலீஸ் நிலையத்தைச் சேர்ந்த பொன்னையா சுப்பிரமணியம் என்னும் இனத் துரோகி மீசாலையில் வைத்து விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டான்.

* 16.5.84 அன்று, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தைச் சேர்ந்த இளைஞர்களை சிங்கள ஆயுதப் படையினரிடம் காட்டிக் கொடுத்த லவனியாவைச் சேர்ந்த தர்மபாலா என்பவ னுக்கு விடுதலைப் புலிகளால் மரண தண்டனை விதிக்கப்பட்டது.



விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்ட இராணுவ டிரக் வண்டி.


* 10.6.84 அன்று, கடுமையான காவல் பந்தோபஸ்துகள் கொண்ட மட்டக்களப்புச் சிறைசாலையில் தடுப்புக் காவலில் வைக்கப் பட்டிருந்த நிர்மலா நித்தியானந்தனை தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிரடிப் படையினர் மிகவும் நுட்பமான, சாதுரியமான இராணுவ நடவடிக்கை மூலம் சிறை மீட்டனர்.

* 15.6.84 அன்று, காரைநகர் கடற்படை முகாமிலிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ள பருத்தியடைப்பில் வைத்து இலங்கை கடற்படைக்குச் சொந்தமான கடல் விமானம் ஒன்றை விடுதலைப் புலிகள் தீயிட்டு நாசமாக்கினர்.

* 4.8.84 அன்று, வல்வெட்டித்துறைக்கு அண்மையில் உள்ள பொலிகண்டிக் கடற் கரையில் 18 சிங்களக் கடற்படைவீரர்களால் சுற்றி வளைக்கப்பட்ட விடுதலைப் புலிகளுக்கும்

விடுதலைப் புலிகளால் பொதுமக்களின் ஆதரவோடு தகர்க்கப்பட்ட பருத்தித் துறைப் போலீஸ் நிலையம்.





மன்னாரில் விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் உருக்குலைந்த இராணுவ ஜீப் வண்டி.

கடற்படையினருக்கும் இடையில் நடைபெற்ற கடும் துப்பாக்கிச் சமரில் ஆறு சிங்களக் கடற்படையினர் கொல்லப்பட்டனர். மூவர் படுகாயமுற்றனர். விடுதலைப் புலிகள் எவ்வித இழப்புமின்றி முற்றுகையினின்றும் மீண்டனர்.

* 5.8.84 அன்று, முதல் நாட்தாக்குதலையடுத்து வல்வெட்டித்துறைக்கருகில் நெடிய காட்டில், மூன்று கவச வண்டிகள், ஒரு ட்ரக், ஒரு ஜீப் சகிதம் வெறியாட்டங்களை நடத்தி விட்டுத் திரும்பிய கொமாண்டோ போலீசார் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் ஒன்பது கொமாண்டோ போலீசார் கொல்லப்பட்டனர்.


* 5.8.84 அன்று மாலை, 50 பேரைக் கொண்ட முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டிசுட்டான் போலீஸ் நிலையத்தின்மீது விடுதலைப் புலிகளின் கொரில்லா அணியொன்று அதிரடித் தாக்குதல் நடத்தியதில் 8 கொமாண்டோ போலீசார் கொல்லப்பட்டனர். ஏனையோர் போலீஸ் நிலையத்தை விட்டுத் தப்பியோடினர். ஐம்பது நிமிட தாக்குதலில் போலீஸ் நிலையம் விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டுக்குள் வந்தது. அதைத் தொடர்ந்து போலீஸ் நிலையத்திலிருந்து நான்கு இயந்திரத் துப்பாக்கிகள், இரண்டு .38 ரக சுழல் துப்பாக்கிகள் ஆகிய ஆயுதங்களையும் ரவைகளையும் எடுத்துக் கொண்டு போலீஸ் நிலையக் கட்டிடத்தை குண்டு வைத்துத் தகர்த்தனர்.

* 6.8.84 அன்று, யாழ்ப்பாணம் மருத்துவமனைக்கு அண்மையில் கவச வண்டியை வைத்து கட்டிடங்களைச் சுட்டுச் சேதப்படுத்திக் கொண்டிருந்த சிங்கள படை வீரர்களுக்கு எதிராக விடுதலைப் புலிகள் வெடிகுண்டுகளை வீசி நடாத்திய தாக்குதலில் இராணுவ கவச வண்டி ஒன்று சிதைக்கப்பட்டதுடன், இராணுவ அதிகாரி ஒருவரும் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டான். மேலும் இரண்டு இராணுவத்தினர் காயமுற்றனர்.

* 6.8.84 அன்று, வல்வெட்டித்துறை கெருடாவில் கிராமத்தில் விடுதலைப் புலி இயக்க வீரன் ஒருவனை சுற்றி வளைத்த இராணுவத்துக்கு மத்தியில் அந்த வீரன் தனித்து நின்று நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் சிங்கள சிப்பாய் ஒருவன் கொல்லப்பட்டதுடன் மேலும் இரண்டு இராணுவத்தினர் படுகாயமுற்றனர். ஏனையோர் தப்பி ஓடினர்.

* 11.8.84 அன்று, மன்னார் பூநகரி பிரதான பாதையில் நிலக்கண்ணி வெடி வைத்து விடுதலைப்புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலின் போது இராணுவ வண்டியில் சென்று கொண்டிருந்த பதின்மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அவர்கள் ஜீப் வண்டியும் சிதைக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்ட விமானம்.



* 14.8.84 அன்று, இராணுவப் படையினர், போலீஸ் கொமாண்டோக்கள் ஆகியோரை உள்ளடக்கிய வல்வெட்டித்துறை போலீஸ் நிலையத்தின் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் பல அரசபடையினர் காயமுற்றனர். விடுதலைப்புலிகள் தரப்பில் எவ்வித சேதமும் ஏற்படவில்லை.

* 24.8.84 அன்று, கரவெட்டி மேற்கில் பாதையொன்றில் விடுதலைப் புலிகள் வைத்த கண்ணி வெடியை அகற்ற முயன்ற இராணுவத்தினர் மீது அக்கண்ணி வெடியை வெடிக்க வைத்ததில் இராணுவத்தினரின் கோபுரக்கவச வண்டி குப்புறக் கவிழ்ந்து பூரணமாகப் பற்றி எரிந்தது. இத்தாக்குதலில் 8 இராணுவத்தினர் அந்த இடத்திலேயே மரணமானார்கள்.

* 24.8.84 அன்று, நீர்வேலி பிரதான பாதையில் வைத்து விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதலின் போது மூன்று இராணுவப் படையினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

* 1.9.84 அன்று, செம்மலைக்கூடாகச் செல்லும் முல்லைத்தீவு — கொக்கிளாய் பிரதான பாதையில் மூன்று வண்டிகளில் வந்து கொண்டிருந்த இராணுவத்தினர் மீது கண்ணிவெடி வைத்து மேற்கொண்ட தாக்குதலில் ஒரு ஜீப் வண்டி, கண்ணி வெடியில் சிதறியது. பின்னால் ட்ரக் வண்டியில் வந்தவர்கள் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். எல்லாமாக இந்தத் தாக்குதலில் 15 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

திக்கத்தில் விடுதலைப் புலிகளால் சிதறடிக்கப்பட்ட இராணுவ டிரக் வண்டி.



* 22.9.84 அன்று, மட்டக்களப்பில் களுவாஞ்சிக்குடி போலீஸ் நிலையத்தின் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் லெப்ரினன்ட் பரமதேவாவும், இயக்கவீரர் ரவியும் வீர மரணமடைந்தனர். எதிர்பாராத நிலையில் போலீசார் உசாரடைந்து தயார் நிலையில் நின்றதால் விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்திவிட்டுப் பாதுகாப்பாகப் பின்வாங்கிச் சென்றனர்.



பிரிகேடியர் ஆரியப்பெருமா (இடமிருந்து மூன்றாவது).

* 1.11.84 அன்று, அச்சுவேலி வசாவிளான் வீதியில் விடுதலைப் புலிகள் கண்ணி வெடி சகிதம் நடத்திய அதிரடித் தாக்குதலில் இராணுவ கவச வண்டி ஒன்று பூரணமாக நாசமாக்கப்பட்டதுடன் ஒன்பது இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மேலும் மூன்று இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

* 2.11.84 அன்று, தொண்டைமானாறு பலாலி வீதியில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவ கவச வண்டி ஒன்று சிதைக்கப்பட்டதுடன் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

* 19.11.84 அன்று, கட்டுவன் தெல்லிப்பளை வீதியில் உள்ள வறுத்தலைவிளானில் நிலக்கண்ணி வெடி வைத்து விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் பிரிகேடியர் ஆரியப்பெருமா உட்பட ஒன்பது இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

* 18.12.84 அன்று, புல்மோட்டையில் நிலக்கண்ணிகளை வைத்து இராணுவத் தொடர் வண்டிகள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவ டிரக் வண்டி ஒன்று சிதறடிக்கப்பட்டது. இத்தாக்குதலில் இரண்டு இராணுவ உயர் அதிகாரிகள் உட்பட 35 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். விடுதலைப்புலிகள் தரப்பில் இரண்டு வீரர்கள் வீர மரணமடைந்தனர்.

* 30.1.85 அன்று, பொலிகண்டியில் விடுதலைப்புலிகளின் முகாமை கவச வண்டிகள் சகிதம் முற்றுக்கையிட்ட நூற்றுக்கும் அதிகமான இராணுவத்தினர்களோடு ஐந்து மணி நேரமாக வீராவேசப் போர் நிகழ்த்திய விடுதலைப் புலிகள் 20 இராணுவத்தினரைக் கொன்று இரண்டு கவச வண்டிகளையும் அழித்தனர். ராக்கட்டுக்கள் மூலம் விடுதலைப்புலிகள் நடத்திய இந்த எதிர்த் தாக்குதலின் போது ஏராளமான இராணுவத்தினர் காயமுற்றனர்.

* 13.2.85 அன்று, முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கொக்கிளாய் இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 106 சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 25 பேர் வரை காயமுற்றனர். இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் 16 வீரர்கள் வீரமரணமடைந்தனர்.

* 22.2.95 அன்று, அதீத அரச விசுவாசமும், அடி வருடித் தனமும் கொண்ட அரசாங்க அதிபர் (மாவட்ட ஆட்சித் தலைவர்) ஞானச்சந்திரன் சிங்களக்குடி பேற்றங்களை ஊக்குவித்து, பாதிக்கப்பட்ட தமிழ் அகதிகளை கவனிக்க வேண்டி பொறுப்பில் இருந்தும் கவனிக்காதது, சட்ட விரோதமாகக் குடியேறிய சிங்களர்களின் அரசாங்க அதிபர் போலச் செயல்பட்டது உட்பட மேலும் பல இன விரோதக் குற்றச் சாட்டுகளின் பேரில் ஆதாரமான தகவல்களைப் பெற்றதன் பின் விடுதலைப் புலிகளினால் அவனுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.

* 13.3.85 அன்று, சிங்களப் பகுதியான வட மத்திய மாகாணத்தைச் சேர்ந்த மதவாச்சி நகரத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் மதவாச்சி போலீஸ் நிலையத்தைச் சேர்ந்த கட்டிடம் ஒன்றும், புகைவண்டி நிலையமும் தகர்க்கப்பட்டன. இதில் ஒன்பது போலீசார் கொல்லப்பட்டனர்.

* 18.3.85 அன்று, நாகர்கோவில் அருகே கடலில் பயிற்சியிலீடுபட்டுக் கொண்டிருந்த விடுதலைப் புலிகள் படகு ஒன்றை, இரண்டு கடல் விமானங்கள், இரண்டு ஹெலிகொப்டர்கள் சகிதம் முற்றுகையிட்ட சிங்கள ஆயுதப் படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய எதிர்த்தாக்குதலில் ஹெலிகொப்டர் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது.

* 10.4.85 அன்று, இராணுவத்தினர் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்ட கொக்குத்தொடுவாய் ஏ.பி.சி. கட்டிடத்தை விடுதலைப்புலிகள் குண்டு வீசித் தகர்த்தனர்.

* 10.4.85 அன்று, வட மாகாணத்தின் மிகப்பெரிய போலீஸ் நிலையமான யாழ்ப்பாணம் போலீஸ் நிலையத்தை விடுதலைப் புலிகள் தாக்கி அங்கிருந்த போலீசாரை விரட்டி விட்டு போலீஸ் நிலையத்திலிருந்த நூற்றுக்கணக்கான ஆயுதங்களையும், ஆயிரக்கணக்கான ரவைகளையும் கைப்பற்றிக் கொண்டு போலீஸ் நிலையத்தின் முக்கிய கட்டிடங்களைத் தகர்த்தனர். இந்தத் தாக்குதலில் 10 போலீசாருக்கு மேல் கொல்லப்பட்டனர்.

* 11.4.85 அன்று, யாழ் போலீஸ் நிலைய இடிபாடுகளை அகற்ற சிங்கள இராணுவத்தினருக்கு உதவுவதற்காகக் கொண்டு வரப்பட்ட கிறேன் (பாரம் தூக்கி) விடுதலைப் புலிகளினால் இடைமறித்துக் கடத்திச் செல்லப்பட்டது.

**10-4-85-அன்று யாழ் பொலிஸ் நிலைய தாக்குதல்**



* 11.4.85 அன்று, செம்மணியில் வைத்து மூன்று போலீசார் விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

* 21.4.85 அன்று, புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் பாதையில் விடுதலைப் புலிகள் கண்ணி வெடி வைத்து இராணுவத்தினர் வந்த மினிபஸ் வண்டியை சிதறடித்தனர். இதில் இருபது இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

* 26.4.85 அன்று, வியாபாரிமூலையில் கண்ணி வெடி வைத்து விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 12 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஒரு இராணுவ கவச வண்டியும் அழிக்கப்பட்டது.

* 26.4.85 அன்று, மூதூர் கட்டைபறிச்சானில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஒரு இராணுவ ஜீப் தகர்க்கப்பட்டது. இதில் லெப்ரினன்ட் அமரியல் உட்பட ஏழு சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

* 28.4.85 அன்று, பருத்தித்துறையில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில், நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

* 28.4.85 அன்று, கரவெட்டியில் இரு தடவையாக விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணி வெடித் தாக்குதலில் 18 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் ஒரு கவச வண்டியும் அழிக்கப்பட்டது.

* 29.4.85 அன்று, அரியாலையில் விடுதலைப் புலிகளால் நிலக்கண்ணி வைத்தும், ராக்கட் தாக்குதல் நடத்தியும் இரண்டு கவச வண்டிகள் தகர்க்கப்பட்டதுடன் பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

* 2.5.85 அன்று, மூதூரில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

* 4.5.85 அன்று, மன்னாரில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் மூன்று இரகசியப் போலீசார் கொல்லப்பட்டனர்.

* 10.5.85 அன்று, மன்னார் போலீஸ் நிலையத்தின் மீது தாக்குதல் நடத்தி விடுதலைப் புலிகள், போலீசார் பயன்படுத்திய ஏழு கட்டிடங்களைத் தகர்த்ததுடன், ஏராளமான ஆயுதங்களையும் கைப்பற்றினர். இத்தாக்குதலின் போது சரணடைந்த இரண்டு போலீசார் விசாரணை செய்யப்பட்டதன் பின் விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்டனர்.



**மன்னாரில் விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் உருக்குலைந்த போலீஸ் நிலையம்.**


* 12.5.85 அன்று, உடுப்பிட்டி பஸ் நிலையம் ஒன்றினுள் இருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் கைக்குண்டு வீசி நடத்திய தாக்குதலில் மேஜர் சிறிலால் மெண்டிஸ் உட்பட ஐவர் கொல்லப்பட்டனர்.

* 13.5.85 அன்று, குச்சவெளி திருமலை வீதியில் கொமாண்டோ போலீசாரின் வான் ஒன்று விடுதலைப் புலிகளால் கண்ணி வெடி வைத்துத் தகர்க்கப்பட்டதில் பல போலீசார் படுகாயமுற்றனர்.

* 13.5.85 அன்று, சாம்பல் தீவு 6ம் கட்டையில் கொமாண்டோ போலீசார் வந்த வான் ஒன்று விடுதலைப் புலிகளால் கண்ணி வெடி வைத்துத் தகர்க்கப்பட்டதில் பல போலீசார் படுகாயமுற்றனர்.

* 22.5.85 அன்று, திருகோணமலையில் விடுதலைப்புலிகள் நடத்திய எறிகுண்டுத் தாக்குதலில் பிரான்ஸ் டி மெல் என்ற உயர் அதிகாரி உட்பட ஐந்து விமானப்படையினர் கொல்லப்பட்டனர்.

* 1.6.85 அன்று, குச்சவெளிப் போலீஸ் நிலையத்தை விடுதலைப் புலிகள் தாக்கி அங்கிருந்த வாகனங்களை முற்றாக அழித்ததுடன் நூறுக்கும் மேற்பட்ட ஆயுதங்களையும் கைப்பற்றினர். இந்தத் தாக்குதலில் பத்துக்கும் மேற்பட்ட கொமாண்டோக்கள் உயிரிழந்தனர்.


கடற்படை முகாம் 3மணி நேரமாக தாக்கப்பட்டு
கடற்படையினர் கொல்லப்பட்டு முகாம்
பலத்த சேதத்திற்குள்ளாக்கப்பட்டது.

* 1.6.85 அன்று, குச்சவெளி போலீஸ் நிலையத்துக்கு அருகில் இருந்த கடற்படை முகாம் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் உயர் அதிகாரி உட்பட முப்பது கடற்படையினர் கொல்லப்பட்டனர்.

* 11.6.85 அன்று, நிலாவெளியில் 72 அறைகள் கொண்ட பீச் ரிசோல்ட் ஹோட்டல் விடுதலைப்புலிகளினால் தகர்க்கப்பட்டது.

* 11.6.85 அன்று, திருகோணமலை தெகிவத்தையில் தமிழ்ப் பெண்களைக் கடத்திச் சென்ற போலீசார் மீதும், சிங்களக் குண்டர்கள் மீதும் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் 12 கொமாண்டோக்கள் கொல்லப்பட்டதுடன் பல குண்டர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து ஐந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

* 12.6.85 அன்று, தெகிவத்தையில் விடுதலைப் புலிகள் சிங்கள இராணுவத்தினர் மீது நடத்திய தாக்குதலில் எட்டு இராணுவத்தினரும் ஒரு போலீசாரும் கொல்லப்பட்டதுடன் ஒரு L.M.G உட்பட ஐந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

* 26.6.85 அன்று, சர்வதேச ரீதியில் தமிழினத்தைக் காட்டிக் கொடுத்த துரோகியும் சிறீலங்கா இனவெறி அரசின் தீவிரவிசுவாசியும், இனவெறி இராணுவத்தின் நெருக்கமான நண்பனுமான சென்ட் ஜோன்ஸ் கல்லூரி அதிபர் ஆனந்த ராஜனை விடுதலைப் புலிகள் சுட்டுக் கொன்றனர்.

* 20.7.85 அன்று, பொலிகண்டியில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

* 10.8.85 அன்று, வவுனியாவில் ரோந்து சென்று கொண்டிருந்த போலீஸ் கொமாண்டோக்கள் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் ஒரு போலீஸ் சுப்பிரிண்டன்ட் உட்பட அறுவர் கொல்லப்பட்டனர். பல நவீன தன்னியக்கத் துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன.

* 18.8.85 அன்று, வாகரையில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத் தொடர் வண்டிகள் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் இரு இராணுவத் தொடர் முற்றுகச் சேதப்படுத்தப்பட்டதுடன் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஏனையோர் படுகாயமுற்றனர். பல ஆயுதங்கள் வெடிகுண்டுகள் கைப்பற்றப்பட்டன.

* 23.8.85 அன்று, மட்டக்களப்பு வந்தாறுமூலையில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட போலீஸ் கொமாண்டோக்கள் மீதான விடுதலைப்புலிகளின் தாக்குதலில் 2 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஜீப் சிதறுண்டது.

* 22.8.85 அன்று, மன்னார் மதவாச்சி பாதையில் ரோந்து சென்ற இராணுவத் தொடர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் ஜீப் வண்டி ஒன்று தூள் தூள் ஆகியது. அதிலிருந்த ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

* 29.8.85 அன்று அம்பாறை மாவட்டத்தில் உள்ள விஞயகபுரம் என்ற இடத்தில் இராணுவ டிரக் வண்டி ஒன்றின் மீது நடத்தப்பட்ட கண்ணி வெடித் தாக்குதலில் ஆறு சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

* 2.9.85 அன்று, ஏறாவூர் போலீஸ் நிலையம் விடுதலைப்புலிகளால் முற்றுகையிடப்பட்டு போலீஸ் கொமாண்டோக்களை சரணடையும்படி விடுதலைப்புலிகள் விடுத்த கோரிக்கையை ஏற்க மறுத்து தாக்குதலில் ஈடுபட்ட போலீஸ் கொமாண்டோக்களை அக்கட்டிடத்துக்குள் வைத்து, அக்கட்டிடத்தை விடுதலைப் புலிகள் தகர்த்துத் தரை மட்டமாக்கினர். கட்டிடத்துக்குள் பல போலீஸ் கொமாண்டோக்கள் கொல்லப்பட்டனர். ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.



* 4-9-85 அன்று, கிண்ணியாவில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவ வாகனங்களின் முன்னால் நடந்து வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில், இராணுவத்தினருக்கு வழிகாட்டியாக வந்த பௌத்த பிக்கு ஒருவர் உட்பட 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

* 12-9-85 அன்று, தமிழ் மக்களை வேட்டையாடி வந்த சிங்கள இராணுவத்தினரின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காக மட்டக்களப்பு வலையிறவுப் பாலத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் தகர்த்தனர்.

* 13-9-85 அன்று, யாழ்ப்பாணம் கோட்டை இராணுவ முகாமிலிருந்து வெளியே வர முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கைக்குண்டுகள் வீசி தாக்குதலை நடத்தி முகாமுக்குள் திரும்பிச் செல்ல வைத்தனர்.

* 14-9-85 அன்று, விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றைத் தாக்க வந்த சிங்கள இராணுவத்தினரின் ஹெலிகாப்டர் ஒன்றை விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்தினர்.

* 15-9-85 அன்று, திருகோணமலை கன்னியாவில் ரோந்து வந்த இராணுவத் தொடர் வண்டிகளின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் 15 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

* 16-9-85 அன்று, பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து ரோந்து செல்லப் புறப்பட்ட இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் குண்டு வீச்சு நடத்தியதில் இரு இராணுவத்தினர் படுகாயமுற்றனர். ஏனையோர் முகாமுக்குத் திரும்பி ஓடினர்.

* 20-9-85 அன்று, கல்லடியில் நடந்து வந்த இராணுவத்தின் மீது விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மேலும் இருவர் காயமுற்றனர்.

* 7-11-85 அன்று, மட்டக்களப்பு மாவட்டம் வாகரையில் விடுதலைப் புலிகள் இராணுவத்தின் மீது நடத்திய தாக்குதலில் 7 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

* 14-11-85 அன்று, மன்னாரில் 14 வாகனங்களில் வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் ராக்கட் தாக்குதலை நடத்தியதில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் இராணுவத்தினரின் ஜீப் வண்டி ஒன்றும் முற்றுகச் சேதமுற்றது.

* 14-11-85 அன்று, முல்லைத்தீவு மாவட்டம் நீராவிப்பட்டியில் 3 வண்டிகளில் ரோந்து வந்து கொண்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் ஒரு இராணுவ வண்டியும் முற்றுகச் சேதமுற்றது.

* 25-11-85 அன்று, கரடியனாறு என்னுமிடத்தில் தேடுதல் நடவடிக்கைக்குப் புறப்பட்ட சிங்கள இராணுவத்தின் மீது சுற்றி வளைத்துத் தாக்குதலை நடத்தி பின்வாங்க வைத்தனர்.

* 27-11-85 அன்று, திரிகோணமலை மாவட்டம் தம்பூரில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தின் மீது தாக்குதலை நடத்தியதில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் நால்வர் காயமுற்றனர். அவர்கள் விட்டுச் சென்ற பொருட்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

* 1-12-85 அன்று, அம்பாறை மாவட்டம் தம்பிலுவில் என்ற இடத்தில் இராணுவத்தின் மீது விடுதலைப் புலிகள் ராக்கெட் தாக்குதலை நடத்தியதில் அவர்களின் ஒரு கவச வண்டியும், ஒரு ஜீப் வண்டியும் சேதப்படுத்தப்பட்டதுடன் பல இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.

* 9-12-85 அன்று, நாவற்குழியில் இராணுவத்தின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் ஆறு பேர் காயமுற்றனர்.

* 19-12-85 அன்று, தொண்டமானாறு இராணுவ முகாமிலிருந்து தேடுதல் நடவடிக்கைக்குப் புறப்பட்ட இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

* 20-12-85 அன்று, யாழ்ப்பாணத்திலுள்ள விடுதலைப் புலிகள் முகாம் ஒன்றை 5 ஹெலிகாப்டர்கள் சகிதம் சுற்றி வளைத்து முற்றுகையிட்ட இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தியதில் இராணுவத்தினர் பின்வாங்கினர். டெலோ ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் இராணுவத்தினருக்கு எதிரான இத்தாக்குதலில் கலந்து கொண்டனர்.

* 26-12-85 அன்று, மன்னார் மாவட்டம் பரப்புக்கடந்தான், ஆட்காட்டிவெளி ஆகிய இடங்களில் இராணுவ வாகனங்களை, ஹெலிகாப்டர்கள் சகிதம் ரோந்து வந்த இராணுவத்தின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 16 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் 3 இராணுவ வாகனங்களும் முற்றுகச் சேதமாக்கப்பட்டன.

# அம்மான் - லட்சிய நாயகன்

செல்லக்கிளி :

அம்மான் :

சந்திரன் :

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த லெப்டினண்ட் செல்வ நாயகத்துக்கு இயக்கம் சூட்டிய பெயர்கள் இவை. கல்வியங்காடு என்ற இடத்தில் ஏழை விவசாயக் குடும்பத்திலே பிறந்து ஆரம்பக் கல்வியைக் கூட தொடர முடியாத நிலையில் கல்வியைக் கைவிட்ட செல்லக்கிளி, ஆரம்பத்தில் அண்ணை கோப்பி விற்பனை வானில் சாரதியாக வேலை பார்த்தான். செல்லக்கிளி இயக்கத்தலைவர் பிரபாகரனுக்கு அறிமுகமான காலத்திலிருந்தே இயக்க நடவடிக்கைகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவன். எந்த வாகனத்தையும் மிகத் திறமையாக ஓட்டும் பயிற்சியைப் பெற்றிருந்த செல்லக்கிளி, ஆயுதங்களாகட்டும், மோட்டார் இயந்திரங்களாகட்டும் பழுதடைந்தால் தானே திருத்தி இயக்கக்கூடிய மிகச் சிறந்த தொழில் நுட்ப அறிவையும் பெற்றிருந்தான். காட்டுப் பாதைகளை அறிவதில் அதிசயிக்கத்தக்க ஆற்றலைக் கொண்டிருந்த செல்லக்கிளி, தனது வாழ்க்கையை, தான் வாழ்ந்த சூழ்நிலையை ஒரு கெரில்லாப் பயிற்சிக் களமாக ஆக்கிக் கொண்டிருந்தான். ஒரு தடவை உடையார் கட்டு குடியேற்றத் திட்டத்தில் காட்டுமரங்களை வெட்டி விவசாயத்தில் ஈடுபட்டிருந்த வேளையில் எதிர்பாராமல் வந்த இரண்டு பெரிய கரடிகளில் ஒன்றை கோடரியால் வெட்டிக் கொன்றான். மற்றக் கரடி கூட இருந்தவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டது.

ஓய்வு நேரங்களில் காட்டுப்பகுதிகளில் கட்டுத் துவக்குக் கட்டி மிருகங்களை வேட்டையாடுவது அவனது பொழுது போக்காகும். ஆரம்ப காலங்களில் காடுகளில் இயக்கத்துக்கான முகாம்களை அமைக்கும் வேலை நடைபெறும்போதெல்லாம் முகாம்களுக்குத் தேவையான அமைப்புக்களைக் கொண்ட மரங்களைத் தேடிக் கண்டு பிடித்து வெட்டுவது, கொட்டில் போடுவது, கூரை வேய்வது போன்ற செயல்கள் அவன் தலைமையில் அவன் மேற்பார்வையில்தான் நடைபெறுவது வழக்கம்.

சிறுவயதிலிருந்தே தனது பெரிய தாயாரின் வீட்டில் வாழ்ந்து வந்தவன் செல்லக்கிளி. அவனது பெரிய தாயாரின் மகன் செட்டி என்ற தனபாலசிங்கம் ஆரம்பத்தில் தமிழீழ விடுதலைப் போராளியாக இருந்த போதிலும், பின் முழுமையான சுயநலவாதியாகவே மாறினான். அவனது துரோகத்தைக் கண்டு கொதித்த செல்லக்கிளி அவனை அண்ணனென்றும் பாராது, "அரசியலைத் துற. அல்லது என் கையாலேயே நீ சாவாய்" என்று எச்சரித்தான். ஆனால் அவன் திருந்தவில்லை. செட்டியின் செயல் எல்லை மீறவே இயக்கத்தின் தலைவர் பிரபாகரனால் செட்டி சுடப்படுகிறான். செட்டி சுடப்பட்டதற்குப் பின்பும் இயக்கத்துக்கும் பிரபாகரனுக்கும் விசுவாசமாக-முழுமையாக தன் உயிரையே தருகிற அளவுக்குச் செயலாற்றினான் செல்லக்கிளி. "செட்டியின் குடும்பத்தைக் காப்பாற்றுவது எனது கடமைதான். அதைவிட இயக்கத்துக்கு நான் ஆற்ற வேண்டிய கடமை பெரிது" இது செல்லக்கிளி உறுதியாக உதிர்த்த வார்த்தைகள்.



இயக்கத்தையும் அவனையும் பிரித்துப் பார்க்க முடியாத அளவுக்கு அவனது பணி இயக்கத்துக்கு அர்ப்பணிக்கப்பட்டது. இயக்கத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே இயக்கம் நடத்திய முக்கிய தாக்குதல் நடவடிக்கைகளிலெல்லாம் பங்கு பற்றியவன் செல்லக்கிளி. முதல் முதலில் இயக்கம் உளவுப்படை போலீஸ் அதிகாரியான கருணாநிதியை அழித்த நிகழ்ச்சி, போலீஸ் உளவுப்படை தலைமையகத்தைச் சேர்ந்த பஸ்தியாம்பிள்ளை குழுவினர் மீதான தாக்குதல், உமையாள்புரம் இராணுவத்தின் மீதான தாக்குதல், பருத்தித்துறை போலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி மீதான தாக்குதல், கந்தர்மடம் வாக்குச்சாவடியில் நடந்த இராணுவத்தினர் மீதான தாக்குதல் என்று இயக்கம் நடத்திய முக்கிய தாக்குதல் நடவடிக்கைகளிலெல்லாம் ஈடுபட்டுத் தன் தனிமுத்திரையைப் பதித்தான் செல்லக்கிளி.



பருத்தித்துறைப் போலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி விஜயவர்த்தனாவைச் சுட்டுவிட்டு அவனிடமிருந்து எடுத்த ஜீப் வண்டியை குன்றும் குழியுமாயிருந்த வீதிகளினூடாக 15 மைல் தூரத்தை 9 நிமிடத்தில் ஓட்டிச் சென்று அந்தத் தாக்குதலில் ஈடுபட்ட இயக்கவீரர்களை இராணுவ முற்றுகைகுட்படாது வெளிக் கொண்டு வந்த செயல் செல்லக்கிளியின் சாரதீயத் திறமைக்கு எடுத்துக்காட்டாகும். அவன் தலைமையேற்றுச் சிறப்புற நடத்திய இன்னுமொரு தாக்குதல் இரகசியப் போலீஸ் அதிகாரி பஸ்தியாம்பிள்ளை குழுவின் மீதான தாக்குதலாகும்.

7.4.78 அன்று அதிகாலை 5.30 மணியளவில் முருங்கன் மடு வீதியின் உட்புறமுள்ள காட்டுக்குள் அமைந்திருந்த மரமுந்திரிகைத் தோட்டத்துக்குள் இருந்த விடுதலைப் புலிகளின் இருப்பிடத்தை முற்றுகையிட்ட உளவுப்படை போலீஸ் அதிகாரி பஸ்தியாம்பிள்ளை குழுவினர் நிராயுதபாணிகளாக இருந்த விடுதலைப்புலி இளைஞர்களைச் சுற்றி வளைத்தனர். இயந்திரத் துப்பாக்கி, கைத்துப்பாக்கி, வேட்டைத் துப்பாக்கிகள்சகிதம் வந்திருந்த போலீசாரிடம் பேச்சுக் கொடுத்து தன் புத்தி சாதுரியத்தால் அவர்களின் கவனத்தைத் திசை திருப்புகிறான் செல்லக்கிளி. போலீசார் சற்று ஏமாந்திருந்த நேரத்தில் விடுதலைப் புலிகள் அனைவரும் ஒன்றாகப் பாய்கிறார்கள் போலீஸாரின் மேல். அடுத்த கணம் போலீஸாரிடமிருந்த சில ஆயுதங்கள் விடுதலைப் புலிகள் கைகளுக்கு மாறுகின்றன. முதன்முதலாக அன்றுதான் கையிலெடுத்த எஸ்.எம்.ஜி. செல்லக்கிளியின் கைகளில் வேகமாக இயங்குகிறது. சில நிமிடங்கள் வேட்டுக்கள் தீர்க்கப்படுகின்றன. புலிகளை வேட்டையாடவென வந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை, சப் இன்ஸ்பெக்டர் பேரம்பலம், சார்ஜன்ட் பாலசிங்கம், கான்ஸ்டபிள் சிறிவர்த்தனா என ஒவ்வொருவராகச் சுட்டு வீழ்த்தப்பட்டனர். இறுதியாக போலீஸார் கொண்டு வந்த ஆயுதங்களாலேயே அவர்கள் சுடப்பட்டதுடன் அவர்கள் வந்த காரையே எடுத்துக் கொண்டு விடுதலைப்புலிகள் ஆயுதங்களுடன் தப்பிச் சென்றனர். மூன்று நாட்களின் பின்னர்தான் பஸ்தியாம்பிள்ளை கோஷ்டியினரின் முடிவு பற்றிய செய்தி வெளியே தெரிய வந்தது. செல்லக்கிளி தலைமையிலான இந்தத் தாக்குதல் நிகழ்ச்சியானது தமிழ்ப் போராளிகள் மத்தியில் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது.

ஆபத்து வரும் வேளைகளில் நிதானமாகச் சிந்தித்து வேகமாகச் செயற்படும் தன்மை செல்லக்கிளிக்குக் கூடவே பிறந்ததாகும். முன்பொரு தடவை செல்லக்கிளி இருந்த கிராமமான உடையார்கட்டுக்கு செல்லக்கிளியைத் தேடி சப் இன்ஸ்பெக்டர் தாமோ

தரம்பிள்ளை சென்றபோது செல்லக்கிளியின் வீட்டுக்கு அண்மையில் செல்லக்கிளியிடமே செல்லக்கிளியைப் பற்றி விசாரித்தான். செல்லக்கிளியோ நிலைமையை உணர்ந்து சற்றும் தடுமாறுது ''வாங்கோ ஐயா செல்லக்கிளியின் வீடு பக்கத்திலேதான் இருக்குது, கூட்டிக் கொண்டு போய்க் காட்டுறன்'' என்று தன் வீட்டுக்கே சப் இன்ஸ்பெக்டரை அழைத்துச் சென்று காட்டிவிட்டு வேகமாக மறைந்து விட்டான். அதன் பின்புதான் சப் இன்ஸ்பெக்டர், செல்லக்கிளி தன்னை ஏமாற்றி விட்டு தப்பிச் சென்றதைத் தெரிந்து ஆத்திரப்பட்டான்.

தனக்குச் சரி எனப்பட்டதை உதாரணங்கள், பழமொழிகளோடு விளக்கி வாதிடுவது செல்லக்கிளிக்குக் கைவந்த கலை. சட்டம் படித்துவிட்டு தமிழினத்தையே ஏமாற்றிக் கொண்டிருந்த கூட்டணி எம்பிக்கள் மத்தியில் நின்று பள்ளிப் படிப்பையே முடிக்காத செல்லக்கிளி ''ஆறு ஆண்டுகளாக நாம் காடுமேடு என்று அலைகிறோம். நீங்கள் முப்பது ஆண்டுகளாக என்ன செய்தீர்கள்?'' என்று அவர்களின் பொது மேடையிலேயே ஏறி விஞ எழுப்பினுன். உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்க என தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் கூட்டம் கூட்டப்பட்ட இடத்துக்குச் சென்று தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படி வாதிட்டான் செல்லக்கிளி. சுயநலமிகள் அவன் வார்த்தையை ஏற்கவில்லை. ஆனுல் தமிழீழ மக்கள் செல்லக்கிளியின் கருத்தை உள்ளூராட்சித் தேர்தலை முற்று முழுதாகப் பகிஷ்கரித்ததன் மூலம் முழுதாக ஏற்றுக் கொண்டனர்.

*1983*ம் ஆண்டு ஜுன் மாதம் *23*ம் நாள் வடமாகாணத்தின் மிகப்பெரிய இராணுவ முகாமான பலாலி இராணுவ முகாமிலிருந்து யாழ்ப்பாணம் நகருக்குச் செல்லும் வீதியில் திருநெல்வேலி என்ற இடத்தில் ரோந்து வந்து கொண்டிருந்த இராணுவ வண்டிகள் இரண்டின்மீது செல்லக்கிளி தலைமையிலான பதினன்கு விடுதலைப் புலிகளை கொண்ட கெரில்லா அணுகி தனது தாக்குதலை ஆரம்பிக்கின்றது. வேகமாக முன்னுல் வந்த ஜீப் வண்டி, விடுதலைப் புலிகள் வைத்த கண்ணி வெடி சரியான நேரத்தில் வெடித்ததால் மேலே தூக்கி எறியப்பட்டு கீழே வந்து விழுகிறது. அதில் வந்த சிங்கள இராணுவத்தினர் கீழே குதித்து தாம் வைத்திருந்த துப்பாக்கிகளைத் தூக்கியபடி ஓட முயல்கின்றனர். பின்னுல் வந்த இராணுவ ட்ரக் வண்டியிலிருந்த இராணுவத்தினர் பீதியினுல் ட்ரக் வண்டிக்குள்ளேயே பதுங்குகின்றனர். விடுதலைப் புலிகளின் துப்பாக்கித் தோட்டாக்களும் வெடிகுண்டுகளும் ட்ரக்கை விட்டு எழமுயன்ற இராணுவத்தினரின் உடல்களைச் சல்லடையாக்குகின்றன. தமிழீழத்தில் முதல் தடவையாக அதிக அளவு சிங்கள இராணுவத்தினர் கொல்லப்படுகின்றனர். இதைக் கண்டு உற்சாக மிகுதியினுல் வெற்றிக் களிப்புடன் மறைவிடத்திலிருந்து தான் வைத்திருந்த இயந்திரத் துப்பாக்கியை இராணுவ வண்டியை நோக்கி இயக்கியபடியே எழுந்து நின்று சுடத் தொடங்குகிருன் செல்லக்கிளி. அதே நேரம் ஜீப் வண்டிக்குள் இருந்து சிங்களச் சிப்பாய் ஒருவன் சுட்ட குண்டு நேராகச் செல்லக்கிளியின் இதயத்தை ஊடுருவிச் செல்கிறது. சப்தமெதுவுமின்றிக் கீழே விழுகிருன் செல்லக்கிளி.

*13* இராணுவத்தினரை வீழ்த்தி ஏராளமான ஆயுதங்களை எடுத்த உற்சாகத்தில் திளைத்த விடுதலைப்புலிகள் செல்லக்கிளியின் மறைவுச் செய்தியை அறிந்ததும் அதிர்ச்சியடைந்து சோகத்தில் ஆழ்கின்றனர். முதல் வாரத்தில் இரண்டு முன்னேடி வீரர்களை இழந்த விடுதலைப்புலிகள் களத்தில் செல்லக்கிளியையும் இழந்ததால் வெற்றிக்கான எக்களிப்பு சிறிதுமின்றி சோகமே உருவாகத் தம் இருப்பிடம் திரும்புகின்றனர். இயக்கம் வளர்ந்து வரும் நிலையில் இயக்க முன்னேடி வீரர்களுக்கு பொறுப்புக்களைக் கொடுத்து அவர்களுக்கு அனுபவப் பயிற்சியைக் கொடுக்கும் வகையில் அந்தத் தாக்குதலுக்கான தலைமையைச் செல்லக்கிளியிடம் ஒப்படைத்துவிட்டுத் தானும் ஒரு வீரனுகத் தாக்குதலில் கலந்து கொண்ட இயக்கத் தலைவர் பிரபாகரனுக்கு செல்லக் கிளியின் மறைவு பேரதிர்ச்சியைக் கொடுக்கிறது. எதிர்காலத்தில் செல்லக்கிளியிடம் ஒப்படைக்கக்கூடிய பொறுப்புக்களைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்த பிரபாகரனுக்கு செல்லக்கிளியின் மரணம் இயக்கத்தில் ஒரு பெரிய தேக்கமாகப் படுகிறது. ஆம்! இயக்கத்துக்கு அவன் ஆற்றிய பணிகளைப் பற்றியும், அவனின் ஆற்றலைப் பற்றியும் பிரபாகரனைவிட வேறு யாருக்கும் முழுமையாகத் தெரிந்திருக்க நியாயமில்லை.



சரித்திரம் படைத்த செல்லக்கிளி சரித்திரமாகிய நாள், தமிழீழ விடுதலைக்கான அகிம்சைப் போராட்டமானது ஆணிவேரோடு பிடுங்கி எறியப்பட்டு ஆயுதப் போராட்ட சகாப்தம் உருவான நாள்.

இயக்கம் தொடங்கிய காலத்தில் சுழல் துப்பாக்கி ரவைகளை ஈயத்தை உருக்கித் தயார் செய்த காலத்தில் கூட இருந்து உதவியதுடன் பின்னர் இயக்க வீரர்களுக்கு தானியங்கித் துப்பாக்கிகளை வைத்துப் பயிற்சி கொடுக்க வெளியில் இரவு பகலாக அலைந்து குறைந்த விலையில் ஏராளமான ஒரிஜினல் துப்பாக்கி ரவைகளை வாங்கி வந்து சேர்த்தது, இவையெல்லாம் செல்லக்கிளி இயக்கத்துக்குச் செய்த மறக்க முடியாத சேவைகளாகும். அன்று செல்லக்கிளி வாங்கி வந்து குவித்த துப்பாக்கி ரவைகளை வைத்தே இயக்கத்தின் முன்னணி வீரர்கள் எல்லாம் சுட்டுப் பயிற்சி எடுக்க முடிந்தது. ஏன் இயக்கத்துக்கென வாங்கப்பட்ட முதல் துப்பாக்கிகூட செல்லக்கிளிக்குச் சொந்தமான இரண்டு மாடுகளை விற்றுக் கிடைத்த பணத்தில் வாங்கப்பட்டதுதான்.

படித்தவர்கள் குழம்பிய காலத்திலும் தான் குழம்பாது இருந்துவந்த செல்லக்கிளியின் கிராம வாசனை தொனித்த வயதுக்கு மீறிய வாதங்களையும், வார்த்தைப் பிரயோகங்களையும் கேட்ட இயக்க வீரர்கள் அவனை 'அம்மான்' என்று அன்புடன் அழைத்து வந்தார்கள். அவனது திறமையான மதிநுட்பமான செயலாற்றல்கள் பல விடுதலைக்குப் பின் சரித்திரத்தில் மட்டுமே வெளிவர வேண்டிய செய்திகள். அவனது இறுதிக்காலமானது தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஓர் திருப்புமுனை. ஆம்! சரித்திரம் படைத்த செல்லக்கிளி சரித்திரமாகிய நாள், தமிழீழ விடுதலைக்கான அகிம்சைப் போராட்டமானது ஆணி வேரோடு பிடுங்கி எறியப்பட்டு ஆயுதப் போராட்ட சகாப்தம் உருவான நாள்.














தமிழீழ மக்களின் நல்வாழ்வுக்காக புலிகளின் பிரச்சாரம்.

# முழுமையான விடுதலையை நோக்கி...

ஈழத் தமிழினத்தின் தேசிய விடுதலைப் போராட்டமான தமிழீழ விடுதலைப் போராட்டமென்பது வெறுமனே ஆயுதப் போராட்டத்தோடு முடிந்துவிடக் கூடிய ஒன்றல்ல. அரசியல், சமூகம், பொருளாதாரம், கலாச்சாரம் ஆகிய சகல துறைகளிலும் புரட்சி ஏற்படுத்தப் பட்டால் மட்டுமே ஈழத் தமிழருக்கு முழுமையான விடுதலை ஏற்படும் என்பதை நன்குணர்ந்த தமிழீழ விடுதலைப் புலிகள் சிங்கள மேலாதிக்கவாதிகளிடமிருந்து அதிகாரத்தை மீட்க இராணுவ அமைப்பையும், பொருளாதார விடுதலைக்காக உணவு உற்பத்திக் குழு, கைக்கொழில் அபிவிருத்திக் குழு ஆகியவற்றையும் அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்த பிரச்சார வெளியீட்டு வாரியம் கலாச்சாரக் குழு என்பவற்றையும் ஏற்படுத்தி தமிழ் மக்களை அணுகி வருகின்றனர்.

இவை தவிர போராட்டக் காலங்களில் தமிழ் மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காக ஆரம்ப சுகாதார நிலையங்கள், நியாய விலைக் கடைகள் போன்றவற்றை ஏற்படுத்தி மக்களோடு ஒன்றி, மக்களை அணி திரட்டி கெரில்லாப் போராட்டமாகத் தொடங்கப்பட்ட தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மக்கள் போராட்டமாக மாற்றும் இறுதிக் கட்டப் பணியைத் தமிழீழ விடுதலைப் புலிகள் இன்று வெற்றிகரமாகச் செய்து வருகிறார்கள்.

**உள்ளூர் உற்பத்திக் குழு:**

இன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் உள்ளூர் உற்பத்திக் குழு தமிழீழ மக்களுக்கு அத்தியாவசியமான பல்வேறு உள்ளூர் உற்பத்தி செயற் திட்டங்களை உருவாக்கி ஊக்குவித்தும், செயற்படுத்தியும் வருகின்றது. போராட்டம் கூர்மையடையும் கால கட்டத்தில் தமது அன்றாட அத்தியாவசியப்



தூர்ந்துபோன குளங்களை திருத்தும் பணியில் இளம் விடுதலைப் புலிகள்.




புலிகளால் உற்பத்தி செய்யப்படும் உள்ளூர் பொருட்களைக் கொண்ட நியாய விலைக் கடைகள்.

**பொதுமக்களுக்கு தற்பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி புலிகளால் நடத்தப்படும் வகுப்புக்கள்.**



பொருட்கள் அனைத்தையும் தமிழீழத்திலே உருவாக்கும் சுதேச பொருளாதார அமைப்பைக் கட்டியெழுப்புவதே இக்குழுவின் முக்கியமான பொறுப்பாகும். தமிழ் மக்கள் அன்றாடம் அத்தியாவசியமாகப் பார்க்கும் பொருட்களை விடுதலைப் புலிகளின் உள்ளூர் உற்பத்திக் குழு தானே உற்பத்தி செய்வதுடன், மக்களையும் உள்ளூர் உற்பத்தியில் ஈடுபட வைத்து அதன் பாவனையின் அத்தியாவசியத்தை மக்களுக்கு எடுத்து விளக்கி வருகிறது.

சிங்கள இராணுவ ஆதிக்கத்திலிருந்து தமிழ் மண் விடுபட்டால் மட்டும் ஈழத் தமிழ் மக்கள் விடுதலை பெற்றுவிட முடியாது. உணவு, பொருளாதாரக் காரணிகள் அந்நிய ஆதிக்கத்திலிருந்து படிப்படியாக விடுவிக்கப்பட்டு நமது (சுதேச) உள்ளூர் உற்பத்தியில் ஓரளவாவது தன்னிறைவு காணப்படின் மட்டுமே நாட்டைக் கட்டியெழுப்பித் தம்மைத் தாமே ஆள முடியும்.

தமிழீழ விடுதலைப் போரின் கூர்மையில் சிறீலங்காவினது தொடர்புகள் துண்டிக்கப்பட்டு சிறீலங்காவின் உற்பத்திப் பொருட்கள் தமிழீழத்துக்கு வருவதே தடைப்படும். எனவே ஆயுதமேந்திப் போராடுதல் தமிழீழ விடுதலைக்கு எத்துணை முக்கியமானதோ உள்ளூர் உணவு உற்பத்தி, உள்ளூர் கைத்தொழில் வளர்ச்சி என்பவையும் அதேயளவு முக்கியமானவை என்குணர்ந்த விடுதலைப் புலிகள் அத்துறைகளில் தீவிர கவனம் செலுத்தி வருகிறார்கள்.




*கலாச்சாரக் குழு:*


தமிழீழ விடுதலைப் புலிகளின் கலாச்சாரக் குழு இன்று மக்கள் மத்தியில் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. கிராமங்கள் தோறும் தெருக்கூத்து, வீதி நாடகம், வில்லுப் பாட்டு, பட்டிமன்றம், பொய்க்கால் குதிரையாட்டம் போன்றவற்றைச் சிறப்புற நடத்தி வருகின்றது. திடீரென ஒழுங்குபடுத்தப்படும் இக்கலை நிகழ்ச்சிகளுக்கு தமிழீழ மக்கள் பெரும் ஆதரவளித்து வருகின்றனர். இந் நிகழ்ச்சிகளின் மூலம் மக்களுக்கு உண்மை நிலையை உணர்த்தி, போராட்ட உணர்வை வளர்க்கும் பணியில் விடுதலைப் புலிகள் வேகமாகச் செயற்பட்டு வருகிறார்கள்.

*மக்கள் பாதுகாப்பு:*

முன்பு விடுதலைப் புலிகள் சிங்கள இராணுவத்தின் மீது தாக்குதல் நடத்தினால் எதிர்நிற்க முடியாத சிங்கள இராணுவம் பதிலுக்கு பொது மக்கள் மீது காட்டுமிராண்டித்தனமாக தாக்குதலை மேற்கொள்ளும். ஆனால் இன்று போராட்டம் ஓர் புதிய பரிமாணத்தை எடுத்து வருகின்றது. தாக்குதலைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் மக்களுடனேயே இருந்து பூரண பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு தமிழ் மக்களையும், சொத்துக்களையும் இராணுவ வெறியாட்டத்திலிருந்து பெருமளவு பாதுகாத்து வருகின்றனர்.

தமிழீழ மக்களும் விடுதலைப் புலிகளோடு ஐக்கியமாகித் தம்மைத் தாமே பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். மக்கள் அனைவருமே இப்புரட்சிகர யுத்தத்தில் தம்மாலியன்ற முழுப் பங்களிப்பையும் செலுத்தி வருகின்றனர். தமிழீழத்தில் இன்று மக்கள் போராட்டம் எழுச்சி பெற்றுள்ளது. தமிழீழம் உதயமாகும் நாள் அண்மித்துக் கொண்டிருக்கிறது.

***யாழ் பொலிஸ் நிலையத் தாக்குதலுக்குப்பின் இராணுவத்திடமிருந்து மக்களைப் பாதுகாக்கும் பணியில் விடுதலைப்புலிகள்***



Liberation Tigers Of TAMIL EELAM

# உலக அரங்கில் விடுதலைப் புலிகள்

''வட மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் கெடுபிடியான பாதுகாப்பு பந்தோபஸ்துக்களையும் மீறிக்கொண்டு, விடுதலைப்புலிகள் தடையின்றி தங்கள் கொரில்லாத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்...

சிங்கள அரசப்படைகளுக்கு எதிரான கொரில்லாத் தாக்குதல்களில் எப்போதுமே முன்னணியில் நின்று கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் தங்களின் கொரில்லா யுத்தத்தைத் துரிதப்படுத்துவதில் இப்போது முனைந்து நிற்கின்றனர் என்பதை இன்றைய நிலைமைகள் சுட்டிக்காட்டுகின்றன.''

— அனிதா பரதாப்

(Sunday, 15-21 APRIL 1984)



''விடுதலை இயக்கங்களில் மிகவும் சிறப்பாக ஸ்தாபனமயப்படுத்தப்பட்டதும், மிக இறுக்கமானதும் மிகவும் பலம் வாய்ந்ததுமான கொரில்லா இயக்கம் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமேயாகும்.

1972ல் புதிய தமிழ்ப் புலிகள் என்ற பெயருடன் நிறுவப்பட்டு, 1976—ல் தற்போதைய பெயரைப் பெற்ற தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமே இப்போது உள்ளவற்றுள் மிகவும் பெரிய இயக்கமாகும். சோசலிசத் தமிழீழத்தை அடையும் நோக்கத்துடன் நகர்ப்புற கொரில்லா இயக்கமாக அமைக்கப்பட்ட இந்த ஸ்தாபனம் இருபத்தாறு வயது கொண்ட பிரபாகரனால் வழி நடத்தப்பட்டது. வட, கிழக்கிலங்கையில் உள்ள தங்கள் முகாம்களிலேயே புதிதாக இயக்கத்தில் சேர்பவர்களுக்குக் கொரில்லா போர் முறையைப் பயிற்றுவிக்கக் கூடிய அளவிற்குத் தாங்கள் போதுமான அமைப்ப ரீதியிலான வசதிகளை விருத்தி செய்து கொண்டுள்ளதாக இந்த இயக்கம் கூறுகின்றது''

— மோகன் ராம்

(Far Eastern Economic Review, 26th April 1984)

''1974—ல் தனித்தமிழீழம் கோரி, புரட்சிக்கான பாதையை முதலில் ஏந்திய தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தையோ, பர்மாவிற்குள் சுயாதீனம் கொண்ட தனிநாடு கோரும் கோசேரன் கிளர்ச்சியாளர்களின் இயக்கத்தையோ அரசாங்கத்தால் அடக்கி ஒடுக்க முடியவில்லை. உண்மையில் தமிழீழ விடுதலைப்புலிகளோ, பர்மியப் புரட்சியாளர்களோ தத்தம் மண்ணில் நன்கு ஆழமாக வேரூன்றியிருப்பதால் இராணுவத்துடனேயே நேரடித் தாக்குதலில் ஈடுபடுவது இவர்களுக்குச் சாத்தியமாகியுள்ளது. கடந்த ஆண்டில் ஸ்ரீலங்கா இராணுவ ட்ரக் வண்டியின் மீது கொரில்லாத் தாக்குதல் நடத்தி பதின்மூன்று பேரைக் கொன்றதும், அண்மையில் விமானப்படை வீரர்கள் இருவரைக் கொன்றமையும் அரசபடைகளுக்கு எதிராகத் தீர்க்கமான போராட்டத்தை நடத்தும் நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் உள்ளனர் என்பதையே உறுதி செய்கிறது.''

(THE WEEK, May 6-12, 1984)

''தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே சாதாரணமாக விடுதலைப் புலிகள் என அழைக்கப்படுகிறது. இருபத்தொன்பது வயது கொண்ட வேலுப்பிள்ளை பிரபாகரனால் வழி நடத்தப்படும் விடுதலைப் புலிகள் இயக்கமே மிகப் பழையதும், வலிமை வாய்ந்த ஸ்தாபனமும் ஆகும். விடுதலைக் குழுக்களிலேயே இதுவே இராணுவரீதியில் மிகச் சிறப்பாக ஒழுங்குபடுத்தப்பட்ட இயக்கமாகும். பரந்த அளவில் சர்வதேச உறவுகளைத் தாம் கொண்டிருப்பதாக இவர்கள் பெருமையோடு குறிப்பிடுகிறார்கள்.

விடுதலை இயக்கங்களில் ஆயுதந்தாங்கிய போராளிகளைப் பெருமளவில் கொண்ட இயக்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமேயாகும்.

புரட்சிகர இளைஞரான வே. பிரபாகரன் நேரடிப் போராட்டத்தில் இறங்கும் நோக்கத்துடன் புதிய 'தமிழ்ப் புலிகள்' என்ற பெயரில் (இதன் முன்னெழுத்துக்களைச் சேர்த்து (T.N.T) நோக்கும் போது இது பூடகமாக வேறு அர்த்தம் தருவதாகவும் உள்ளது) சிறிய அமைப்பை ஆரம்பித்தார். இதுவே விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் பின்னால் தோன்றிய சகல இயக்கங்களுக்கும் பெருமளவில் முன்னோடியாக அமைந்தது.

ஏனைய குழுக்கள் எல்லாம் இந்தியாவிலேயே பயிற்சித் தளங்களைக் கொண்டிருக்கும் போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே இலங்கை மண்ணில் தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கும் ஒரேயொரு இயக்கமாகும்.''

— ஷேகர் குப்தா

India Today, 31st March 1984

எந்த விடுதலை இயக்கத்திற்கு பரந்துபட்ட மக்கள் ஆதரவு உள்ளது என்பதை திட்டவட்டமாக வரையறுத்து சொல்ல முடியாது போனாலும் விடுதலைப் புலிகளின் சமீபத்திய கெரில்லாத் தாக்குதல்களில் வெற்றிகளை பார்க்கும் போது இந்த இயக்கம் தான் மிகவும் செயல் திறன் மிக்கதாகவும், செம்மையான முறையில் தாபனமயப் படுத்தப் பட்டதாகவும் விளங்குகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் 1972-ம் ஆண்டு வே. பிரபாகரனின் தலைமையில் தமிழீழ புரட்சிகர இளைஞர்களால் ஆரம்பிக்கப் பட்டது. இது சிறிலங்கா அரசால் தடை செய்யப்பட்ட இயக்கம் ஆகும்.

பண்டைய தமிழர்களின் வீர வரலாற்றை சித்தரிக்கும் குறியீடான புலியை தமது அமைப்பு சின்னமாக இவர்கள் வரித்துக் கொண்டுள்ளனர்.

Le Monde
(French Daily)—23-12-84

தமிழ்ப் புலிகள் என அழைக்கப்படும் இந்த கெரில்லாக்களிலே தமிழீழ விடுதலைப் புலிகள் (எல்டிடிஈ) இயக்கம்தான் பழமையான இயக்கம் ஆகும். இவர்கள் சிறிலங்காவினுள் ஓர் புரட்சிகர சோஷலிச நாட்டை அமைக்க விரும்புகின்றார்கள்.

The Economist
April 13, 1985

பெரிய இயக்கங்கள் என குறிப்பிடப்படுபவையில் திரு. பிரபாகரன் தலைமை தாங்கும் இயக்கமான தமிழீழ விடுதலைப்புலிகள் (எல்டிடிஈ) தான் கடந்த பத்து வருடங்களாக தீவிரமாக செயல்பட்டு வந்துள்ளார்கள். கடந்த 10 வருடங்களாக பல போராட்டங்களை அவர்கள் நடத்தி இருக்கின்றார்கள்.

Frontline
March 23—1985

# விடுதலைப் போரில் களப்பலியான வீரத் தளபதிகள்



லெப். சத்தியநாதன்
(சங்கர்) 27-11-82



லெப். சால்ஸ் அன்ரனி
(சீலன்) 15-7-83



லெப். செல்வநாயகம்
(செல்லக்கிளி) 23-7-83



கப்டன் ஞானேந்திரமோகன்
(ரஞ்சன்) 13-7-84



லெப். பரமதேவா
(ராஜா) 22-9-84



கப்டன் ரவீந்திரன்
(பண்டிதர்) 9-11-85



லெப். சிவமூர்த்தி
(சபா) 25-10-85



லெப். குவேந்திரராஜா
(வாசன்) 21-5-85



லெப். ரஞ்சன்
(சைமன்) 13-2-85



லெப். கேமசிறி
(பழசு) 13-2-85




காப்டன் சிவலிங்கம்
(லாரன்ஸ்) 25-10-85




லெப். மேரிதாசன்
(இளங்கோ) 12-5-85



லெப். சுதாகர்
(நிதி) 18-12-84



லெப். ஸ்ரீஸ்கந்தராஜா
(காண்டீபன்) 24-12-84



# புலிகளின் தாகம்
# தமிழீழத் தாயகம்